தமிழ்க் கலை

1745



உடலுழைந்த நாட்டிற்கு உயிர்விடுத்த உத்தமர்

கலை —

1-3-1948

விலை
அணா 4

திருக்குறள் மூலம்

ஏப்ரல் இறுதியில் வெளிவரும்

நல்ல 'கிளேஸ்' தாள்!

சிறந்த பதிப்பு! அழகிய அச்சு!

'பாக்கெட்' அளவு 5" × 3½"

ஒரு பக்கத்திற்கு ஒரு அதிகாரம்

அடக்க விலைப் பதிப்பு

	தனிப்பிரதி	12	100
அட்டைக் கட்டம்	0 6 0	4 0 0	30 0 0
காலிகோ	0 10 0	7 0 0	35 0 0
ரெக்ஸைன்	1 4 0		

காகிதக் கட்டுப்பாட்டினால் குறைந்த அளவே வெளியிடுகின்றமையால் 1—4—48-க்குள் முழுத் தொகையும் முன்பணம் அனுப்பிப் பதிவு செய்து கொண்டவர்களுக்குத்தான் பிரதிகள் தர உறுதி செய்யப்பெறும்.

வெளியிடுவோர் :

தமிழ்க்கலைப் பதிப்பகம்

சென்னை - 10

நஞ்சன்கூடு பல்பொடி

I.D L.61, மெடிகேடட்

I.D.L.21 ச்யாவனப்ராச — சுவாசகோச டானிக்

ஆல்மன்டைன் — பலவிருத்தி, வீர்யவிருத்தி

ஹூர்ர்டோன் — ரக்தகோசடானிக்

வியாதி விபரம் எழுதித் தபால்மூலம் சிகிச்சை பெறலாம்.

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு மதராஸ்.

தமிழ்க்கலை

●

தமிழ் நாட்டிலும்
தமிழர் வாழ்
பிற இடங்களிலும்
நன்கு பரவியுள்ள
இதழ்!

●

விளம்பர விகிதம்:

1	பக்கம்	ரூ.	60
½	,,	,,	35
¼	,,	,,	20

அட்டை உள்புறம் ரூ. 75
,, வெளிப்புறம் ரூ. 100

நீண்டகால
விளம்பரத்துக்கு
நேரில் எழுதுக

பொறுப்பாளர்:
'தமிழ்க்கலை', சென்னை-10

தமிழ்க்கலை

ஆசிரியர்
அ. மு. பரமசிவானந்தம் M.A., M.Litt.

விரியும் அறிவு நிலை நாட்டுவீர் - அங்கு
வீழும் சிறுமைகளை ஓட்டுவீர்—பாரதி.

1 — 3 — '48

கலை - 5 ❊ நூல் - 9

பொருளடக்கம்

தியாகி! 4
அடிகளாரின் உண்ணாவிரதங்கள் 15
தமிழ்நாட்டு எல்லைத் தீர்ப்பு 16
அடிகளை எண்ணிய இரங்கற் பாக்கள் 17
இனியேனும் கேளீரோ! 18
தமிழ் - தமிழர்: அடிகளார் கருத்து 19
ஆங்கிலம் பற்றி அடிகளார் எழுத்து 20
காந்தியாருக்கு ஞாபகச்சின்னம் 23
லண்டனில் தமிழ்ச் சங்கம் 25
கல்லும் சொல்லாதோ கதை 26
நிலவின் விக்கம் 31
இரு ஓவியங்கள் 33
குற்றச்சாட்டு! 38
தேவதையின் மகன் 41
நாட்டை உருவாக்கும் பணி 44
மதிப்புரை 48

கலையில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்கள். கட்டுரையாளர் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியாகார்.

தியாகி!

ஆம்! தியாகம்தான்! வாழ்வில் தோன்றிய அந்நாள் தொட்டுத் தியாகமே குறிக்கோளாகக் கொண்டு, வாழ்வை மற்றவர் வளம் பெறவே பயன் படுத்தி, உலகம் வாழத் தாம் வாழ்ந்து, உலகம் இன்பில் வளரத் தலையாய் பெரும் பாடு பட்டு, பிறந்த பொன்னாடு பிறநாட்டாரின் முன் தனி உரிமை நாடாக வேண்டிய வழிகளில் உழைத்து - வாழ்ந்து - வளர்ந்து, ஆம்! அதே நாட்டினர்க்காகவே உயிரையும் தியாகம் செய்தவரை என்னென்று சொல்வது. தியாகி! தியாகிதான்!

உலகம் தோன்றி ஆண்டுகள் பல பேராயிரம் கழிந்திருக்கும். எண்ணற்ற கற்பங்கள் கணக்கில்லா வகையில் கழிந்தொழிந்தன. வரலாறு காட்டாது கழிந்த காலங்கள்பல. வரலாற்றுக் கட்டுக்கு அடங்கக் காணும் ஆண்டு ஒன்றிரண்டாயிரம் தான். அந்த வரலாற்றுத் தொடக்கத்திலே உலகம் அநாகரிகத்தில் இருந்தது என்றும், நாம் நாகரிக உலகத்தில் வாழ்கின்றோம் என்றும் இதுவரையில் பலரும் பேசி வந்தனர். மனிதன் வாழ்க்கை வளமறியாது அநாகரிகப் பண்பிலே அனைவரையும் அடித்துக் கொன்று அன்று வாழ்ந்தான் என்றும், இன்றைய நாகரிக உலகில் அந்தக் கொடுஞ் செயல்கள் காண முடியாதென்றும் கூறி வந்தோம்! ஆனால் காண்கின்ற காட்சிகள் நாம் இன்னும் அந்த அநாகரிக வாழ்க்கையை விட்டு நீங்காதவர்கள் தான் என்பதைக் காட்டுகின்றன. அன்பு விளக்கை - அறிவுச் சுடரை - அகிம்சைக் கொழுந்தை - அருளாளனை ஆடவன் ஒருவன் சுட்டுக் கொன்றான் என்பதைத் தான் நம் நாகரிகக் காட்சியாகக் காண்கின்றோம். அநாகரிகக் காட்டுமிராண்டித்தனம் இங்கே - நம் நாட்டில் - புண்ணிய பூமியில் - பாரத நாட்டில் நிலவுகின்றது என்பதை உலகம் அறிந்தது. எந்த நாட்டு மக்களுக்காகப் பாடு பட்டாரோ - எந்த மக்கள் இனம் விடுதலை பெற்றுமுன்னேற வேண்டுமென்று, அல்லும் பகலும் அனவரதமும் உழைத்தாரோ - வாழ்வது எந்த நாட்டுமக்களுக்கவே என்று எண்ணினாரோ எண்ணிய அவர் - வாழ்ந்த அவர் அந்த நாட்டு மக்களுள் ஒருவனாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்திய நாடு விடுதலை பெற்றுவிட்டது. பெற்ற விடுதலை முற்றும் பலன் தரு வழியில் இன்னும் உருவாக்கப்படவில்லை. ஆனால் அந்த விடுதலைக்காகவே தன் ஆயுள் முழுவதையும்

அர்ப்பணம் செய்து, அந்த விடுதலையைப் பெறுவதற்காகப் பலமுறை சிறையிடைப்பட்டு, அந்த விடுதலைக்காகவே அரும் பெரும் தியாகங்களையெல்லாம் செய்து, குண்டு கொண்டு கொன்று குவிக்கும் ஆங்கிலப் பேரரசை அடிப்பணியவைக்கும் அன்பு முறையினை மேற்கொண்டு, சாந்தம், அகிம்சை, சத்தியம் என்பனவே வாழ்வுக்கும் விடுதலைக்கும் வழிகாட்டிகளாவன என்பதை விளக்கி, அவற்றாலேயே விடுதலையை பெற முயன்று, வெற்றியும் பெற்ற - அடிமை இந்தியாவை உரிமை இந்தியாவாகச் செய்த உத்தமன் கரம்சந்து மோகனதாஸ் காந்தி - அகிம்சா மூர்த்தி - அனைவருக்கும் வாழ வழிகாட்டிய அண்ணல் 30 - 1 - 48 வெள்ளிக்கிழமை மாலை 5 12-மணிக்கு வாழி பாட்டுக் கூட்டத்திற்குச் செல்லுங்கால் - மக்களுக்கு அறிவை விளக்கச் செல்லுங்கால் ஒரு இந்துவால் - சமயத்தின் பேரால் - மதத்தின் பேரால் - மதவெறி காரணத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். மறைந்தார் அடிகளார்! அன்பு தலை சாய்ந்தது!

வரலாறு தொடங்கிய நாள் தொட்டு இன்றுவரை உலகில் உண்டாகிய சமயங்கள் பல; வாழும் சமயங்கள்பல. சமய உண்மைகள்பல! எல்லா உண்மைகளும் உலகில் வாழும் மக்கள் உயர்வடைய வேண்டுதற்கு வேண்டிய வழிகளை உணர்த்துவனவேயாகும். அவ்வுண்மைகளை அறிவுறுத்தத் தோன்றிய பெரியார்கள் பலர். அவருள் தலையாயவர் மறைந்தஅடிகளார் காந்தியார் அவர்கள் அவார்கள். அறிஞர்பலர் அடிகளார் பற்றிப் பல எழுத்துக்கள் எழுதியுள்ளனர். அவர்கள் அடிகளாரைப் பிறசமயத் தலைவர்களைப் போன்றவர் என்றும் அவர்கள் காட்டிய வழியை வாழ்விக்க வந்த வள்ளலார் என்றும் இவரைக் கூறியுள்ளார்கள். நாம் கூறுகிறோம் இவர் அந்தச் சமயத்தலைவர்கள் அனைவரிலும் மேம்பட்டவர் என்று!

கிறிஸ்துவுக்குபின் அன்பினைப் போதிக்க அவதரித்த பெரியார் காந்தி அடிகளார் என்று அச்சமயத்தோர் கூறுகின்றனர். இயேசு அன்புக்கடலாக விளங்கியவர்தான். ஆனால் அடிகளாரது அன்பு இயேசுவையும் பின் தங்கச் செய்துவிட்டது. எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணி நலம் புரியும் நற்பண்பு கொண்ட அடிகளார் நிலை அனைத்தினுக்கும் மேம்பட்ட தன்றோ! மனித இனத்திலே தான் அன்பு செல்லும் வேண்டும் என்ற அளவுக்கு இயேசுவின் அன்பு சென்றது. மற்ற காய்க்காத மரத்தையும், உதவாதென்ற பன்றியையும் வெட்டி வீழ்த்தவும், கடலில் ஆழ்த்தவும் இயேசு ஆணையிட்டார். அடிகளாரோ காயாத மரமாயினும் ஊறு இழைக்கும் விலங்காயினும் ஒரு தீங்கும் இழைத்தலாகாது என்று ஊருக்கு உபதே

சம் செய்வது மட்டுமன்றி உயர்ந்த வாழ்விடை வாழ்த்தும் காட்டினர். ஆம்! பாம்பு கடித்தாலும் அதைக் கொல்லலாகாது என்பது 'பாபு' வின் அறிவுரை.

நம் நாட்டிலே பலசமயங்கள் இன்றும் உள்ளன. அவற்றுள் தமிழ் நாட்டில் தலை சிறந்த சமயமாகப் போற்றப்படுவது சைவம். சைவம் அன்பின் அடிப்படையில் கட்டப்பட்டது. அன்பும் சிவமும் ஒன்றென்பது அறிந்த மொழி! தென்னுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறை என்ற சமய வேறுபாடு கருதாத அடிப்படையின்மேல் சைவம் கட்டப்பட்டது. அச்சைவம் வளர்த்த பெரியோர்களில் சிலர் எதிரிகளைக் கழுவேற்றும் வரையில் கூடச் சென்றிருக்கின்றனர். அவருள் ஒருவர் சம்பந்தர்.

வாதில் தோற்ற சமணர் எண்ணாயிரவரைக் கழுவேற்றினர். எண்ணினால் நடுங்கும் செயல் இது. அரசன் கழுவேற்ற ஆணை இட்டான், சம்பந்தர் அந்த ஆணையை மறுக்கவில்லை. காரணம் இதோ காட்டுகிறார் சேக்கிழார்.

'புகலியில் வந்த ஞானப் புங்கவர் அதனைக்கேட்டு
இகலிலர் எனினும் சைவர் இருந்துவாழ் மடத்தில் தீங்கு
தகவிலாச் சமணர் செய்த தம்மையால் சாலும் என்றே
மிகைஇலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்தவேலை'

என்பது பெரியபுராணம். ஆம் தாம்வாழ்ந்த மடத்திற்குத் தீயினை வைத்தமைதான் அவரைப் பெரிதும் வாட்டிற்று. அதனால், சமணர் பலவாயிரர் கழுவேறினர்.

இன்று அடிகளாருக்கு நேர்ந்த இன்னல்கள்பல. உல்லாசமாக ஊர்சுற்றி வராது அப்பரடிகளைப் போன்று பல்வேறு துன்பங்களை ஏற்றார். தமக்காக அல்ல! தம்நாட்டு மக்களுக்காக! இறப்பதற்குச் சிலநாட்களுக்குமுன் கொல்லக் குண்டு வீசிய கொடுமையாளனை விடுக என்றார்.

இவையெலாம் காந்தி அடிகளார், சமயம் கடந்த சத்திய மூர்த்தியாக விளங்கினர் என்பதைக் காட்டவில்லையா? சமய போதகரினும் மேம்பட்டவர் என்பதை விளக்கவில்லையா?

காந்தி அடிகளார் இறுதியை எண்ணும் போது சைவ அடியார் மற்றொருவர் தம்பண்பு நம்முன் வருகிறது. சேதி நாட்டுச் செல்வர் மெய்பொருளார் கொல்லவந்தவனை வணங்கினர். கட்டவிழ்பவன்போல் கத்தியை எடுத்து நினைத்த வண்ணம் செய்தான் அக்கயவன் முத்திநாதன் - அன்றைய

கோட்சே! வீழ்ந்த அன்பர் அமைச்சரை அழைத்துக் கொன்றவனுக்கு ஊறு செய்யலாகாது என ஆணை யிட்டார். ஆவி அகன்றது.

> கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
> புத்தகம் அவிழ்ப்பான் போன்றுபுரிந்தவர்வணங்கும்போதில்
> பத்திரம் வாங்கித் தான்முன் நினைத்த அப்பரிசே செய்ய
> மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்எனத்தொழுதுவென்றார்

என்றார் சேக்கிழார். இந்தப் பாட்டில் காணும் மெய்பொருளார் நிகழ்ச்சிக்கும் இன்றையமெய்பொருளார் காந்தியார் இறுதிக்கும் வேற்றுமை என்ன? விநாயக கோட்சே மறைத்து வைத்த துப்பாக்கியை, அடிகளார் வணங்கும்போது, கையிலெடுத்துச் சுட்டான். சாய்ந்தார் சுடர்க்குன்று - அறமலை! அவர் வாய், திறந்து பேசி இருக்குமேல் கொலைபாதகனை விடுக என்று விளம்பி இருக்கும். ஆனால் அந்தப் பேற்றினைப் பெறவில்லை அக் கொடியோன். குண்டுமேல் குண்டு! இரண்டு மூன்று நான்கு அடிகள் உடலத்தில் ஊடுருவிச் சென்றன. குண்டுகள் என்று மண்ணிற் சாய்ந்தார். மாண்டார். இல்லை. வெற்றி பெற்றார், சேக்கிழார் கூறுவது போன்று! அவர் வெற்றி நாட்டுக்கு வழிகாட்டுவதாக.

'தொழுத கையுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார், அழுத கண்ணீரும் அனைத்து,' என்றான் அருந்தமிழ் அறவோன் வள்ளுவன். அவனது இலக்கணத்துக்கு இன்று இலக்கியமானான் கோட்சே. அவனது குவித்த கை குண்டை வீசிற்று. கையுள் குண்டுவிசும் ஆயுதம் அடங்கிற்று. கொன்றான் அறிவனை, தன் செயலில் வெற்றி கொண்டவன் தான் என இறுமக்கலாம் என்று. ஆனால் இறந்தவன் கோட்சே, வென்றவர் காந்தி! என்னும் நின்று வாழ்பவர் காந்தி.

காந்தியார் இறந்தார் என்ற செய்திகேட்ட உலக மக்கள் அனைவரும் கலங்கினர். சாதி - மத - மொழி - நாடு இன் வேற்றுமைகள் எல்லாம் கடந்து அனைவரும் - உலகமக்கள் எல்லோரும் ஒன்றுகூடி உளம் உடைந்தனர். அடிகள் மார்பில் பட்ட குண்டு இருநூறுகோடி மக்கள் மார்பிலும் பட்டதாயிற்று. அத்துணை நாட்டுமக்களும் வாட்டம் எய்தி - வாட்டத்திற்கு இலக்காகத் தம்தம் அரச மாளிகைகளில் வானளாவப் பறந்த கொடிகளை இறக்கினர். கூப்பிய கையினராய் - போற்றிய வாயினராய் - இந்தியாவை நோக்கிப் புலம்பினர். பலர் இந்தக் கொலை நடந்ததை நம்பவும் மறுத்தனர். 'நல்லவராயிற்றே காந்தி, அவரை ஏன் கொன்றான் கொலைஞன்'

என்ற கேள்வி கள்ளங் கொள்ளாப் பிள்ளையுள்ளங்களில் பிறந்தது. அந்தக் கேள்விக்கு ஆங்கிலநாட்டுப் பேரறிஞன் பெர்னுட்சா பதிலளித்து விட்டான். காந்தி மிகமிக நல்லவராக இருந்தார், அந்த நல்இயல்பே அவருக்கு இந்த முடிவினைத் தேடித் தந்தது என்பது அந்த விடை.

மக்கள் கலங்கிய கண்களோடு, நல்லறிஞர்களுக்கு - அன்பு வழிகாட்டுபவர்களுக்கு முடிபு இதுதானு என்று ஆராயத் தொடங்கினர். ஆராய்ந்தனர். உலக வரலாறு ஆம் என்ற முடிவைத் தந்தது. அன்புமதம் என்ற கிறிஸ்தவ மதத்தைப் போற்றிப் புரக்கவந்த கிறிஸ்து அந்த மதத்தாராலேயே வெறுக்கப்பட்டார். உடன்வாழ்ந்த ஒருவனாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டார். கொலையுண்டார். முகமது தம்நாட்டு மக்களாலேயே அடியுண்டு அவதியுற்ருர். அப்பிரகாம் லிங்கன் தன் நாட்டு மக்களுக்கு நலம் பெற அறவுத் துறையில் உழைத்தார். ஆகவே அந்நாட்டு மக்களாலேயே கொல்லப்பட்டார். உலகில் அறிவு விளக்கேற்ற அரும்பாடுபட்டவர் சாக்கிரடீஸ். அவரும் அவர்நாட்டு மக்களாலேயே நஞ்சு ஊட்டப்பட்டார். இன்று நம்நாட்டில் நம்மை வாழ்விக்கவந்த காந்தி அடிகள் - அன்பு வழியை - அறநெறியை இவ் வன்பு உலகில் வாழவைப்பேன் என்று வாடி வருந்தி அதற்கே பாடுபட்ட அண்ணலார் - அரும் சமயம் பரந்த கொள்கையோடு பாரிடை பரவ வேண்டும் என்ற பெருந்தகை - அந்த சமயத்தைச் சேர்ந்த - நாட்டைச் சேர்ந்த - மத வெறிகொண்ட - மனிதத் தன்மையற்ற - விநாயககோட்சேவால் சுட்டுக் கொல்லப்பட்டார். மக்கள் இனம் இன்றும் அந்த இயேசு, சாக்ரடீஸ், லிங்கன் ஆகிய பெரியோர் வாழ்ந்த காலத்திலே இருந்த வாழ்வில்தான் இருக்கிறது. நாகரிகம் - வாழ்வு எல்லாம் பகற்கனவே! நம்மை நாம் கொல்கிருேம், நல்லவரைக் கொன்றதன் மூலம். அடிகளைக் கொன்றதன் மூலம் உலகக் கண்களில் இந்தியா தன் உயர்நிலை இழந்தது. இதுதான் விடுதலை பெற்றதன் பயனேயோ?

அடிகளார் மறைந்து திங்கள் ஒன்று அகன்றுவிட்டது. மறைந்த பெரியார் வாழ்வில் நாம் அறிந்தன பல. அவர்தம் வாழ்க்கை வரலாற்றை அவரே எழுதிவைத்துச் சென்றிருக்கிருர், நற்காலமாக. இன்றேல் எத்தனையோ புனைகதைகள் இத்துணைநாளில் புறப்பட்டிருக்கும். அவர் வாழ்வைச் சிறிது எண்ணிப் பார்த்தல் நலம் பயப்பதாகும்.

கத்தியவாரிலுள்ள போர் பந்தரில் 1869 - அக்டோபர் 6-ம் நாள் அடிகளார் நல்லதொரு குடும்பத்தே பிறந்தார்.

அவர்தம் முன்னோர் கத்தியவார் அரசருக்கு அமைச்சராக விளங்கினர். தந்தையார் காபாகாந்திக்கு நான்காவது மனைவி மூலம் பிறந்தவர் அடிகளார். இளமையிலேயே எளிய வாழ்வும் தூய உள்ளமும் பெற்று விளங்கினார். 13-ம் ஆண்டில் கஸ்தூரிபாய் அம்மையாரை மணந்தார். மணந்தபின்பும் கல்வியில் நாட்டங் கொண்டு கற்றார். 17-ம் ஆண்டு பத்தாம் வகுப்பு தேர்ந்தபின் பவநகர் கல்லூரியில் பயிலச் சென்றார். அவர் அப்படிப்பு பயன்தராது என அறிந்து, ஆங்கில நாட்டுக்குச் சென்று கற்கவிரும்பினார். 1887ல் தம் இளமனைவியையும், சில மாதங்களேயான குழந்தையையும் விட்டு இங்கிலாந்து சென்றார். அவர் செல்லுமுன் அன்னைக்கு அவர் அளித்த வாக்குறுதி அனைவரும் வாழ்வில் செய்யவேண்டிய உறுதியாகும்.

மது அருந்துவதில்லை - மாமிசம் உண்பதில்லை - அன்னிய மாதரை அண்டுவதில்லை என்ற இந்த மூன்று உறுதிகளையும் அன்னைக்கு அளித்துவிட்டு இங்கிலாந்து சென்றார். பாரிஸ்டர் ஆனார்.

1891-ல் வக்கீலாகி இந்தியா வந்திருந்தபோது அவருக்குத் தென்னாப்பிரிக்காவுக்கு வருக என்று ஒரு வழக்குபற்றிய வேண்டுகோள் வந்தது. தென் ஆப்பிரிக்கா சென்றார். சென்று, கொண்ட வழக்கைக் குறைவற முடித்துத் திரும்பலாம் என்று சென்றவர் இருபது ஆண்டுகள் அங்கே தங்கநேர்ந்தது. தென் ஆப்பிரிக்காவில் இந்தியர் மீது வெள்ளையர் இழைத்திடும் அவதி அவர் மனதை உறுத்திற்று. பிறர் துன்பம் கண்டு சகியாத புத்தர்பிரான் உலக இன்பத்தை வெறுத்து போதி நிழல் அடைந்தது போன்று, இந்திய மக்கள் வாடுவதைக் கண்டு, தம்வாழ்வை ஒறுத்து - தியாகப் செய்து - மக்கள் வாழ்வில் மனம் இருத்தினார். தென் ஆப்பிரிக்காவில் பல்வேறு இயக்கங்களைக் கண்டார். அந்த இயக்கங்கள் மூலம் வெள்ளையர் ஆதிக்கங்களை வேரறுக்க முயன்றார்.

1906-ல் கைக்குறிவிதியை எதிர்த்து ஆரம்பித்த இயக்கமே முதல் சத்தியாக்கிரக இயக்கமாகும். அங்கே சிறைவாசமும் பெற்றார் அடிகளார். தம் உடன் வாழ்வார் ஒழுக்கம் குன்றின் அவர் உண்ணாவிரதம் இருப்பார். அவரது உண்ணாவிரதங்கள் எல்லாம் மற்றவர் நிலைகெட்டகாலத்து அவரைத் திருத்துவதற்காகவே அமைந்தன. (உண்ணாவிரதங்களைப் பற்றிய குறிப்பு மற்றொரு பக்கத்திற் காண்க).

1914-ல் லண்டனில் சிலநாள் தங்கி அப்போது தொடங்கிய பெரு யுத்தத்தே பங்கெடுத்தார். பின்னர் உடல்நலக் கேட்டினால் 1915-ல் இந்தியா வந்தார்.

இந்தியாவந்த அந்தநாள்முதல் இறந்த இந்தநாள்வரை அவர் இந்திய மக்களுக்குச் செய்த சேவை - தொண்டு அளவில்லை. ஆற்றிற அறவுரைகள் கணக்கில. காங்கிரஸ் மகா சபையின் உள்ளிருந்தும், வெளியிருந்தும் கடந்த 32 ஆண்டுகளாக அடிகளார் நாட்டுக்காக - நமக்காக உழைத்தார். உழைப்பிற்கு நன்றியாக நாம் அளித்தது நான்கு குண்டுகள் - உண்டோம் அவர் உயிரை.

கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளாக அடிகளார் இந்திய நாடு விடுதலை பெற ஆற்றிய பெரும் போர்களைக் கண்டவர் பலர் இன்று நம்மிடை உள்ளனர். போர் என்றால் குண்டும்-கொடுமையும் ஏந்திப் பிற உயிர்கள் பிரியும் வகையில் வதை செய்து பெறும் வெற்றியல்ல - போரல்ல. 'கத்தியின்றி, ரத்தமின்றி யுத்த மொன்று வருகுது' என்று அன்று - அந்தப் போர் தொடங்கிய அன்று - பாடியது போன்று சாத்வீகப் போராட்டம் செய்தார் அடிகளார் ஒருமுறையல்ல இருமுறையல்ல பலமுறை. இந்தியமண்ணிலேயே மக்கள் மாறுபட்டகாலத்து அவர்தம் மாறுபாட்டை நீக்கும் வழிகண்டார் அவர். அது தான் உண்ணவிரதம். தென் ஆப்பிரிக்காவில் கண்ட அவர்தம் அருமருந்து, இருக்கும் இந்நாள்வரையில் கைகண்டமருந்தாகவே விளங்கிற்று. இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்கூட இந்துமுஸ்லீம் பிணக்கு அகல அவர் இருந்த இறுதி உண்ணுவிரதம் நாம் அறிந்ததே யாகும்.

இந்திய நாட்டு அறப்பணியில் முதலாவதாக அவர் பெற விழைந்தது விடுதலை. அந்தவிடுதலைக்கு நாடு விரைந்து செல்ல மூன்று முக்கிய-சிறந்த செயல்களை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார்.

1. இந்து முஸ்லீம் நட்புடைமை

2. குடிமைத் தொழில்களையும், கைராட்டைத் தொழிலையும் வளர்த்தல்

3. தீண்டாமையைப் போக்குவது.

இம் மூன்றின் மேலே கருத் திருத்தி அடிகளார் முடிபுவரை உழைத்தார்.

ஒத்துழையாமை இயக்கத்தின் மூலமாகவும் அடிகளார் ஆங்கில அரசை ஆட்டிவைத்தார். 1930-ல் அவர் செய்த உப்புச் சத்தியாக்கிரகம் வரலாற்றில் இடம் பெற்ற ஒன்றாகி விட்டது. விடுதலை கருதி இலண்டனில் நடை பெற்ற மகா நாடுகளுக்கு அடிகள் சென்றார். இங்கு வந்து வந்து சென்ற அரசப் பிரதிநிதிகளோடு ஆழ்ந்து யோசித்தார். ஒல்லும் வகை

யிலெல்லாம் முயன்று வீழ்ந்த தாயகத்தை வாழவைக்க வேண்டும் - அடிமைநாட்டை உரிமை நாடாக்க வேண்டும் என்ற உறுதியுடன் உழைத்தார்.

1935-ல் அடிகளார் தங்குமிடம் வார்தாவாகிவிட்டது. வார்தாவில் அடிகளார் வருங்கால இந்தியாவுக்குப் பல ஆக்க வேலைகளுக்கு அடிகோலினார். அங்கிருந்து அவர் ஆக்கிய ஆணைகள் பல - அறவுரைகள் பல.

1944-ல் தம் வாழ்வின் துணையை - 13-ம் வயதில் பற்றிய தலைவியாரை இழந்தார். இதற்குள் அடிகளார் பலமுறைசிறை சென்றார். அருமை மனைவியாரையும் சிறையிடை இழந்தார்.

1944-இடையில் இறுதியாகச் சிறையிலிருந்து வெளிவந் தார். உலகப் போரும் இறுதிக்கட்டத்தை எய்திற்று. அடிகளாரின் சத்துவப் போராட்டம் பயன் அளிக்கத் தொடங் கிற்று. சிறையிருந்த-நாட்டுத்தலைவர்களெல்லாம் விடுதலை பெற்று வந்தனர். இந்தியநாடு விடுதலை பெற, ஆங்கில நாட்டு அதிகாரம் பெற்ற தொழிற் கட்சியும் விரும்பிற்று. பல ஏற் பாடுகள்-எதிர்பாராத முடிவுகள். இந்து முஸ்லீம் கலகங்கள்- அடிகளாரின் இடையீடு. முடிவில் நாடு துண்டிக்கப்பட்டது 1947 - ஆகஸ்டு 15-ல் விடுதலை பெற்றது

தாய்நாடு விழைந்த விடுதலையைத் தேடித்தந்த பெரியார்- அண்ணல் - விடுதலைநாடு எப்படி இருக்க வேண்டும் என்பதற் காகத் திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருந்தார். அரசியல் விடுதலை பெற்ற மக்கள் பொருளாதாரம் வாழ்க்கைமுறை முதலிய அனைத்திலும் விடுதலைபெற்று உயரவேண்டிய வழி களை ஆய்ந்து கொண்டிருந்தார். அந்த ஆய்வின் தொடக்கத் தில் - இடையில் அவர் மூழ்கி இருந்தார். பெற்ற விடுதலையின் முழுப் பயனையும் அவர் காணவில்லை. சில நாட்களில் எல்லா வகையான விடுதலையும் மக்கள் பெற - எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்திவாழ - ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லாதிருக்க அந்த இன்பவாழ்வு இந்தியாவில் மலர அதைக்கண்டு மகிழ 125 ஆண்டுகள் வாழ்வேன் என்று மகிழ்ந் தார். அவர்தம் அரும் உழைப்பு நாட்டுக்குப் பலநலன்களைத் தர இருந்தது. ஆனால் நம்மவனே மதவெறிகொண்டு அவரைக் கொன்று மாய்த்தான். மரித்தார் அண்ணல்.

இல்லை ! அவர் நம்மோடு வாழ்கின்றார். மறைந்து அருள் கின்றார். அவர்தம் ஆன்மா அமைதி பெறுக என்று கூறி னும் பொருந்து. அவரது ஆவி, கவியரசியார் கூறியதுபோன்று நம்மோடு என்றும் நிலவும். தாம் பெற்ற விடுதலையை மக்கள் பெருக்கம் கொண்டு காக்கும் வழியில் - பிற விடுதலைகளைப்

பெறும் வழியில் - அனைத்து இன்பமும் பெருகி ஓங்கும் வகையில் - இந்திய மக்கள் எல்லா நலமும் எய்தும் வகையில் அது அவர் ஆன்மா - நம்மிடை கலந்து - நம்மோடு கலந்து - நமக்காக - பிறந்த பொன்னாட்டுக்காகப் பாடுபடும். அவர்தம் தூண்டுதலினால் நாம் நலன் பல பெற இருக்கின்றோம்! பெறுவோம்.

இறப்பில் முகிழ்ப்பதுயாது? 'கோதுமைவிதை பூமியில் தூவப்படுகிறது. முளைப்பதற்குமுன் அது செத்து மடிகிறது. செத்த கோதுமையில்தான் செடி உண்டாகின்றது. அது வளர்ந்து பூத்துக் காய்த்து மக்களுக்குப் பயன் தருகிறது.' இது இயேசு பெருமான் மக்களுக்குக் காட்டிய உவமைகளுள் ஒன்று. உலகத்தார் வாழ்வைக் காணும் உண்மைகளில் ஒன்று. விதை அழுகிக்கெட்டு, உருமாறி, மறைந்தபிறகே - மாய்ந்தபிறகே செடி துளிர்க்கிறது. ஆகவே நாட்டுக்குக் கோதுமையாக இருந்த நல்லார் - காந்தி அடிகளார் இறந்தார். அவர் இறந்த அந்த நிலையிலே - இறக்கத் தொடங்கும் நிலையிலே விடுதலை பெற்றோம். அவர் இறப்பில் விடுதலை முகிழ்த்தது. அந்த இறந்த கோதுமையில் செடி முகிழ்த்தது உலகம் உய்ய. இதோ இன்று அடிகளார் மறைவில் உலகம் உய்யப் பல வழிகள் உள்ளன. இருந்து அருள்புரிந்த எம்மான் மறைந்தும் - மறைந்த பிறகும் நாட்டு மக்களுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றார். இனிதான் அவர்தம் அன்புச்செடி வளர வேண்டும். அவர்தம் ஆர்வச்செடி தழைக்க வேண்டும். அவர்தம் அவாக்களாகிய பூவும் இனித்தான் பூக்கவேண்டும். அவர் வாழ்வுக்கு வழிகாட்டிய உண்மை - சத்தியம் - தயை - சாந்தம் - கருணை ஆகிய கனிகள் பழுக்க வேண்டும். பெற்ற கனிகளை நாட்டிலே உற்றவர் அனைவரும் வேறுபாடு காணு வகையில் - காட்டவகையில் கலந்து - ஒன்றி உண்டு உருவாக்கிய விடுதலையை என்றும் வளம்பெறக் காக்கவேண்டும். அவர்தம் மரிப்பில் நாம் அறிந்த உண்மைகள் அளவில. அவற்றை இந்த மண்ணிடை வாழும் ஒவ்வொருவரும் பின்பற்றக் கடமைப் பட்டவர்களாவோம். அது நமது கடமை - முறை - செயல்! அடிகளார் தூயவாழ்வு - அன்புமொழி - அறவுரை என்றும் நமக்கு உதவுவனவாகும்.

மறைந்த அடிகளாரின் நினைவினைக் கொண்டாட மக்கள் பலவழிகளில் முயல்கின்றனர். அவர்தம் சாம்பல் இந்திய நாட்டுப் பல ஆறுகளில் கலக்கப்பட்டது. அங்கங்கு பல கட்டிடங்கள் அவர் பேரால் அமைக்க வேண்டும் எனப் பலர் முயல்கின்றனர். அமரிக்கநாட்டிலும்கூட அத்தகைய முயற்சி நடைபெறுவதாக அறிகின்றோம். மகிழ்ச்சிதான். ஆனால்

ஒன்று! எலும்பைப் பல ஆறுகளில் கரைப்பதிலும், வானளாவக் கட்டிடங்கள் எழுப்புவதிலும் மட்டும் நாம் அவருக்கு நன்றி செலுத்தி விட்டோம் என்று கருதுவார்களானால், அவர்களை வாழும் வகையற்றவர் என்றே சொல்லலாம். ஜவகர் தெரிவித்தவாறு வெறும் கோயிலன்று அடிகள் வேண்டியது. இச்செயலை அவர் வாழ்நாளிலே வெறுத்துப் பேசிய பேச்சின் எதிரொலி இன்னும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆகவே கோபுரங்களும், கூடங்கள் அமைப்பதிலும் கடல்களில் அவர் சாம்பலைக்கரைப்பதிலும் நாம் அவருக்கு நன்றி செலுத்தினவர் ஆகமாட்டோம். அவர் காட்டிய அறநெறியை-போற்றிய பெருநெறியை-வாழ்ந்த வகைமுறையை அறிந்து பின்பற்றி வாழ வழிதேட வேண்டும். நம் நாட்டில் வாழும் மக்களுக்குள் யாதொரு வேறுபாடும் கருதாது வாழ வேண்டும். அனைவரும் உணவும் உரிமையும் வாழ மனையும் பெற்றவர்களாக ஆக வேண்டிய வழிகளில் பாடுபட வேண்டும். பாராள்வோர், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களினம் தலை தூக்கும் வகையில் வாழ்வைத் திருத்தி அமைக்க வேண்டும். ஜாதிவெறியும் மதவெறியும் தகர்த்து எறியப்பட வேண்டும். எந்த மதவெறி மகாத்மாவைக் கொல்லப் பயன் பட்டதோ அந்த வெறி நாட்டில் இனி ஒருநாளேனும் தங்கப் பார்த்தல் கூடாது. சாதிகளின் பேராலும், சமயங்களின் பேராலும், கட்சிகளின் பேராலும், கருத்து வேற்றுமைகளின் பேராலும் நடைபெறுகின்ற கூட்டங்கள், மாநாடுகள், இதழ்கள், பிற செயல்கள் அனைத்தும் நசுக்கப்பட வேண்டும். ஒருசாதி வாழ, மற்றொருசாதி வாடப்பார்க்கும் எந்த வாணிபமும், பொருள் துறையும், வாழ்க்கை முறையும் நாட்டில் கால்கொள்ளாவாறு கருவறுக்கப்பட வேணடும். ஆளும் இனத்தவரே வரவர ஜாதி வெறியும் சமயவெறியும் கொண்டு வருவதைக் காண்கின்றோம். அவர்கள் மாநாடுகட்கும், கூட்டங்கட்கும் தலைமை தாங்கவும், திறக்கவும், மூடவும் புறப்படுகின்றனர், தம் அரசியல் பணியையும் மறந்து. அவர்கள் ஒன்று அடிகள் சொற்படி அரசியற் காரியங்களில் வேற்றுமையற்று உழைக்க வேண்டும். அன்றேல் வெளியேற வேண்டும். இவை அரசியலாரும் அதை ஆக்குவோரும் உடன் ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்.

தமிழ் நாட்டுப் பெரியார் - ஈ. வே. ரா. அவர்கள் விடுத்த அறிக்கை உண்மையில் வரவேற்கத்தக்கதே (அறிக்கையை மற்றோரிடத்தில் காண்க.) காந்தியடிகளின் உயிரைக் கொண்ட மாசு இந்து மதத்தோடு மடியட்டும். இனி இந்திய சமயம் காந்திசமய மாகட்டும். இந்தியநாடு காந்திநாடாகட்டும்.

இந்திய மக்கள் காந்திமக்கள் ஆகட்டும். சிறப்பாக அடிகள் மறைந்த நாள்தொடங்கிக் காந்தி சகாப்தம் - காந்தி ஆண்டு தொடங்கப்பெறுதல் வேண்டும். இதுவரையில் உலகம் காணாத ஒருவருக்கு நாம் ஆற்றவேண்டிய அரும் தொண்டுகள் பலப்பல! அவற்றை ஏட்டில் எண்ணி எழுதுதல் இயலாது. ஆற்றவேண்டியன பல. அறிஞர் பலர் பேசியும் எழுதியும் வருகின்றனர். அடிகளால் அறவுரை வாழ்வில் கடைபிடிக்கத் தக்கது. அவர்தம் அறிவுரைப்படி வாழின் நாம் வாழ்வோம்-நாடு வாழும் - உலகமும் வாழும். அத்தகைய ஆக்கப் பணிக்கு அனைவரும் எல்லா வேறுபாடுகளையும் மறந்து ஒன்று சேரவேண்டும். சேர்ந்து செம்மையுற வேண்டும். அச் செம்மை ஆக்கம் நல்கும், அனைத்து நலமும் நல்கும். அந்த ஆக்கப் பணியை உடனே மேற்கொள்ள வேண்டும். மேற்கொள்ள சேரவாரும் சகத்திரே என்ற அன்பு முழக்கம் எழுகிறது. தயாராவோம்! சேர்க! திரள்க! சிறக்க! செழிக்க!

வள்ளுவரின் வழிவளர்ந்த தமிழா நீதான்
வாய்மையுடன் தாய்மைஅறம் வளர்த்த வள்ளல்
தெள்ளுதமிழ் நூல்களெலாம் தெளிவாய்ச் சொல்லும்
தெய்வபெருங் கருணையையே செய்தார் காந்தி
கொள்ளைகளும் கொலைவெறியும் குமுற வாடும்
குவலயத்தில் கொடுமைகளைக் குறைக்க நீதான்
அள்ளி யெங்கும் தமிழ்மொழியின் அறிவை வீசி
ஐயன் எங்கள் காந்திவழி அகிம்சை காப்பாய்

—நாமக்கல் கவிஞர்

கௌசல்யா கிரைப் மிக்சர்

இது, குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றுவலி, அஜீர்ணம், குடல் கோளாறு, மாந்தம் முதலியவை உண்டாகாமல் தடுத்து, நல்ல ஜீர்ண சக்தியைத் தந்து, குழந்தைகளைப் பாதுகாப்பதில் சிறந்த ஔஷதம்!

'இம்மருந்து ஒவ்வொரு வீட்டிலும் இருப்பது நல்லது.

கௌசல்யா பர்மசி லிமிடெட்

P. O. Box 88, மதராஸ்

அடிகளாரின் உண்ணாவிரதங்கள்

1. 1913, தென் ஆப்பிரிக்கா.

தம் ஆச்சிரமத்திலிருந்தோர் ஒழுக்கம் தவறியதற்காக ஒரு வாரம். அதற்குப் பின்பும் 4½ திங்கள் ஒரு வேளை உணவு.

2. 1914, தென் ஆப்பிரிக்கா (போனிக்ஸ்).

பிறர் ஒழுக்கம் தவறியதற்கு இரண்டு வாரம்.

3. 1918, மார்ச் 12. ஆமதாபாத்.

வேலை நிறுத்தக்காரர் தம் உறுதி குன்றுவதைத் தடுத்து, உடன்பாடேற்படும் வரை வேலை நிறுத்தம் நீடிக்க வேண்டியதற்காக மூன்று நாட்கள்.

4. 1919, ஏப்ரல் 13. சபர்மதி.

நாடியாடியில் ரயில் தண்டவாளங்களை நீக்க முயன்ற கொடுமை போக்க மூன்று நாட்கள்.

5. 1921, நவம்பர் 9. பம்பாய்.

வேல்ஸ் கோமகன் வந்தபோது நடந்தகலவரம் நீங்க ஐந்து நாட்கள்.

6. 1922, பிப்ரவரி. பர்டோலி.

சௌரி சௌரா சம்பவம் சம்பந்தமாக ஐந்து நாட்கள்.

7. 1924, செப். 18. டில்லி.

கோஹத்தில் இந்து - முஸ்லிம் சச்சரவு காரணமாக இருபத்தோரு நாட்கள்.

8. 1925, நவ. 25. சபர்மதி.

ஆச்சிரமவாசிகளிடை தவறு கண்டு அது நீங்குவதற்காக ஏழு நாட்கள்.

9. 1932, செப். 20. எரவாடா சிறை.

மக்டொனல்டின் வகுப்புத்தீர்ப்பை எதிர்ப்பதற்காக ஏழு நாட்கள்.

10. 1932, டிச. 22. எரவாடா சிறை.

தோட்டி வேலை விரும்பிய தன் சகாவான அப்பாசாகேப் பட்டவர்த்தனுக்கு அனுதாபம் தெரிவிக்க இரண்டு நாட்கள்.

11. 1933, மே. 8. எரவாடா சிறை.

உயிர் நலத்துக்காக இருபத்தோரு நாட்கள்.

12. 1933, ஆகஸ். 16. எரவாடா சிறை.

வசதிகள் மறுக்கப்பட்டமை குறித்து ஏழு நாட்கள். முடிவில் விடுதலை.

13. 1934, ஜூலை.

ஒரு சனாதனியைச் சீர்திருத்தக்காரர் தடிகொண்டு தாக்கியதற்காக. ஏழு நாட்கள்.

14. 1939, மார்ச்சு 3. ராஜ்கோட்

ராஜ்கோட் மன்னர் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறியதைக் கண்டிக்க ஐந்து நாட்கள்.

15. 1943, பிப். 10. பூனா

ஆண்டவனிடம் முறையீடு செய்து ஆகாகான் அரண்மனையில் இருபத்தோரு நாட்கள்.

16. 1947, செப். 1. கல்கத்தா

வகுப்புப் பூசலை நீக்க மூன்று நாட்கள்.

17. 1948, ஜன. 13. டில்லி (இறுதி)

வகுப்புப் பூசல் நீங்கவும் இந்திய நாடும், பாகிஸ்தானும் ஒற்றுமை பெறவும் ஆறு நாட்கள். —(சு. மி.)

தமிழ்நாட்டு எல்லைத் தீர்ப்பு

இன்று தமிழர் உள்ளங்களில் முக்கியமாக வாட்டிவரும் ஒன்று தமிழ் நாட்டு எல்லை அமைப்பே. வடக்கே தெலுங்கரும், மேற்கே கன்னடரும், தெற்கே மலையாளிகளும், தமிழ்நாட்டுச் சில பகுதிகளைத் தமதாக்கிக் கொள்ளவேண்டும் என்ற நோக்குடன் எல்லாத் தந்திரங்களையும் கையாளுகின்றனர். அனைத்தினுக்கும் மேலாகத் தமிழர் தலைநகராகிய தமிழர் பெரும்பாலோராக வாழ்கின்ற தமிழ் நாட்டுக்குட்பட்ட சென்னை நகரை ஆந்திரர் கேட்டு அட்டகாசம் செய்வதைக் காணத் தமிழர் ஆத்திரம் கொள்ளா திருக்கமுடியவில்லை. ஆந்திரர் செய்கை ஆத்திர மூட்டக் கூடியதுதான். காணும் கண்ணும், எண்ணும் மனமும் உடையவர் யாரும் இந்த எல்லையைப் பற்றி உண்மையில் உளம் உடையத் தேவை இல்லையே! கோவைமா நாட்டில் தீர்மானம் தீட்டியது போன்று, தமிழர் பெரும்பாலராக வாழ்கின்ற பகுதிகள் அனைத்தும் தமிழ்நாட்டு எல்லைக்குள் அடக்கப்படும். சிறந்த தமிழர் தலைநகராம் சென்னையும் அந்த நாட்டு எல்லையில் அடங்கும். தமிழர் தலைநகராகவே அது விளங்கும். மறைந்த அடிகளார் பகர்ந்த முறை போன்று ஆந்திரர் ஆய்வுக் கண்கொண்டு - அறியும் உள்ளங் கொண்டு காண்பார்களாயின், எல்லைக் கமிஷன் இல்லாமலேயே எல்லாவற்றையும் முடிவுசெய்து கொள்ளமுடியும். ஆனால் அவர்கள் ஆத்திரப் பேச்சுகள் தமிழரை அலறி எழச் செய்கின்றன. தமிழ் நாட்டு மக்களுக்கு நாம் கூறுகிறோம், ஆத்திரம் வேண்டாம் அமைதி பெறுங்கள் என்று. தமிழ்நாட்டு அரசியலமைப்பு மன்ற உறுப்பினர்கள் விட்டுக் கொடுக்கமாட்டார்கள். சில திங்களுக்கு முன் நாம் கலைமூலமாக விடுத்தவேண்டுகோள் அவர் தம் உள்ளங்களில் ஒலித்துக் கொண்டிருக்கும். பெருவாரியாக உள்ள எல்லாப் பகுதிகளையும் நிச்சயமாகத் தமிழ் நாட்டோடு சேர்த்தே நாம் நம் நாட்டைப் பெறுவோம். அத்துடன் சிலர் நினைப்பது போன்று ஆந்திரர்மட்டும் பிரிந்து கன்னடரும் மலையாளிகளும் கலக்க வாழ்வோம் என்றும் எண்ணவேண்டாம். தனித்து யாருடைய பிணைப்புமின்றிப் பெருவோம் நம் நாட்டைப் பெரும்பாலாக நாம் வாழும் பகுதிகளை உள்ளடக்கி.

இந்த எல்லைத் தீர்ப்பைப்பற்றிப் புள்ளி விவரங்களோடு கூடிய கட்டுரைகளும், மங்கலங்கிழார்போன்ற பெரியார்களது எழுத்துக்களும், அரசியல் அறிஞர்களது ஆய்ந்த முடிபுகளும் அடுத்த இதழில் வெளிவரும். பெரும்பகுதி எல்லைத் தீர்ப்பு மலராகவே அது காட்சி யளிக்கும்.

அடிகளை எண்ணிய இரங்கற் பாக்கள்

1. ஐயகோ உலகமே அனியாய மீதென்ன
   அவனி யெல்லாம்
உய்யவே வழிகாட்டு முத்தமநங் காந்திமகா
   னுயிரை வௌவும்
வெய்யமன முடையோனு மேதினியி லுண்டோகொல்
   வீணே யிந்தியா
நையவோ அம்மம்ம நன்றிகெட்ட செய்கைநம்
   நாட்டிற் கண்டோம்

2. இமயம் சாய்ந்தது இந்தியா தாழ்ந்தது
   இந்து முஸ்லிம்
சமயம் சாய்ந்ததின் சஞ்சலம் பாய்ந்தது
   சமதர் மஞ்சார்
அமயம் தேசமும் அரசியல் பெற்றும்பின்
   அன்னி யர்கள்
நமையும் நகைக்கவும் நவிலொணாச் செய்கையும்
   நடந்ததுவே

வேறு

3. கொல்லாமை மேற்கொள்வான் வாழ்நாண்மேல் கூற்றுவனும்
செல்லா னெனுந்திருத் தமிழ் மறையும் சிதைந்ததுவே
நல்லார்க ளெல்லார்க்கும் நாயகனின் அறவுரைகள்
எல்லாரு மெந்நாளு இனிதேத்திப் போற்றுவமே.

வேறு

4. காந்திமான் வகுப்புக் கலவரம் போக்கவே
போந்ததும் முயிரையும் பணயமாய் போக்கினர்
சாந்தியை யவ்வுயிர் சார்க்கவே யவருரை
யேந்திநா மொழுகுதல் யாவர்க்குங் கடனரோ !

சமரச சன்மார்க்க சங்கம்
புதுப்பாளையம்

இனியேனும் கேளீரோ!

ரா. சீனிவாசன்

மன்னியநற் சுதந்திரத்தை மாண்புடனே வளர்த்துநவி
உன்னதமாம் குறிக்கோளை உலகமதில் கண்டருளி [வான்
இன்னுயிர்தான் வேண்டிடினும் இசைந்தேதான் கொடுத்திடு
தன்னிகரிலாத் தலைவனவன் தரணிதனில் சிறந்தோனே. 1

உண்மையினை உளந்தனிலே உறுதியாகக் கொண்டுமேதான்
திண்மையாய மனத்தினையே திருந்தவே அடைந்துள்ளான்
விண்ணுயர்ந்த மலைபடினும் விள்ளிடா உள்ளத்தோன்
அண்ணல்நம் காந்திமகான் அடிகள்தாம் அய்யாவே. 2

அய்யகோ மறைந்திட்டார் அநியாயக் கொலையினிலே
மெய்யாக இடிந்ததையா இந்நாட்டின் இமயமேதான்
அய்யாவோ இழந்துநின்றோம் அறிஞனும் அருளாளனை
செய்யாத செயல்செய்தான் செருக்குற்ற இளைஞனுந்தான் 3

இந்நாட்டுச் சுதந்திரத்தை இவரேதான் தந்திட்டார்
இந்நாட்டுத் தொண்டினுக்கே தன்னிதயம் அளித்திட்டார்
நன்னாட்டு மக்களுந்தாம் நல்லுலக மக்களுந்தாம்
என்னாட்டம் கொண்டுஇனி ஏக்கத்தை நிறுத்திடுவார்! 4

இந்துமுஸ்லிம் கலகங்கள் இந்நாட்டில் விடுங்களென்றார்
சந்துசெய்தே வாழ்வதுதான் சரியானதென்று சொன்னார்
இந்தியநாட்டு மக்காள்! இனியேனும் கேளீரோ!
எந்தைகாந்தி சொற்களை நீர் இனியேனும் ஏற்பீரோ! 5

அரசியலாம் உரிமையினை அடைந்தாலே அமையுமோதான்?
பொருள் நிலையின் உரிமைகளில் சமூகநல உரிமைகளில்
பெருமைதரு ஒழுக்கமதில் முன்னேற்றம் வேண்டுமென்றார்
அருமைமிகு நாட்டீரே! அடையீரோ இம்மூன்றும் 6

தமிழ் - தமிழர் : அடிகளார் கருதது

தமிழ்மொழிப் பயிற்சியைப் பற்றி யான் ஒன்றும் கூறுவதில்லை என்று சிலர் என்மீது பழி சுமத்துவதாகக் கேள்வியுற்றேன். அப்பழி என்னை அணுகாது. என்னை நன்கறிந்தவர் என்மீது அப்பழி சுமத்த ஒருப்படார். ஆங்கிலம் பயில்வதற்கு முன்னர் தமிழ்மொழி பயிலல் வேண்டும் என்று யான் பன்முறை பகர்ந்திருக்கிறேன். 1915-ம் ஆண்டிலேயே ஆங்கிலத்திலும் தமிழ்மொழியைச் சிறப்பாகக் கொள்ளுமாறு தமிழ்மக்களை வேண்டிக் கொண்டேன். இன்றைக்குப் பத்தாண்டுகட்கு முன்னர், இந்தியா முழுவதிலும் சுற்றிச் சுற்றி அயல் மொழி வாயிலாகப் பிள்ளைகட்குக் கல்வி புகட்டலாகாதென்று கிளர்ச்சி செய்தேன். தாய்மொழியில் பேசுமாறும் தாய்மொழி நூல்களைப் பயிலுமாறும் மக்கட்கு விண்ணப்பம் செய்துகொண்டேன்.

திருக்குறள் நூலைப் பற்றிய சில செம்மொழிகள் உங்கள் வரவேற்பில் மிளிர்கின்றன. இருபது ஆண்டுகட்கு முன்னரே யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தை நேராகப் படித்தல் வேண்டுமென்று என் உள்ளத்து எழுந்த அவாவே யாகும். தமிழ்மொழியில் புலமை பெறுதற்கு உரிய ஓய்வு எனக்கு இல்லை. அது குறித்து யான் உறும் வருத்தத்திற்கோர் அளவில்லை.

அவரவர் அவரவர்க்குரிய தாய்மொழி வாயிலாகவே கல்வி பெறல் வேண்டும். தமிழ்மக்கள், தங்கள் தாய்மொழியாகிய தமிழ் பயில வேண்டுவது அவர்களது இன்றியமையாக் கடமை. தமிழர் தம் மொழியை ஆங்கிலம் முதலிய மொழிகளைவிட முதன்மையாகக் கருத வேண்டும். (1927 தூத்துக்குடி)

தென் ஆப்பிரிக்காவில் யான் நிகழ்த்திய உரிமைப் போராட்டத்தில் தமிழ்மக்கள் புரிந்த துணையைப்போல் வேறு எந்த இந்தியரும் புரியவில்லை. அவர்கட்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களைப் பயில வேண்டும் என்று நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழி பயில்வதில் மிக ஊக்கமாக ஒரு திங்கள் படித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன்.

தமிழ் மனம் கவரும் இனிய ஒரு மொழி: தமிழ்மக்களில் பண்டைய நாளிலும் இந்நாளிலும் பல அறிஞர் இருந்தனர் - இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும், பயிற்சியாலும் அறியக்கிடக்கின்றது.

இந்தியாவில் ஒரு இனம் ஏற்பட வேண்டுமானால் சென்னை மாகாணத்துக்கு அப்புறம் உள்ளவரும் தமிழர் உணர்தல் வேண்டும்.

தமிழ்மக்களை யான் காணும்போதெல்லாம் அவர்கள் எனது இரத்தக் கலப்புற்ற உடன்பிறந்தவர்கள் போலத் தோன்றுகிறார்கள். எல்லா இந்திய மக்களினும் தமிழ்மக்களே பெரிதும் பொறுமைப்

ஆங்கிலம்பற்றி அடிகளார் எழுத்து

ஆங்கிலக் கல்வி, இப்பொழுது கற்பிக்கப்படும் போக்கில், அது தன்னைக் கற்ற இந்தியர்களை அவர் மொழியில் வறியர்களாக்கியது என்பதும், இந்திய மாணவர்களின் மேல் ஆற்றல் தாங்கொணுச் சுமையைச் சுமத்தியது என்பதும், நம்மைப் போலிகளாக்கியது என்பதும் நான் தெளிந்த உண்மைகள். பிரித்தானியத் தொடர்பில் உண்ணாட்டு மொழிகளின் இடத்தில் ஆங்கிலத்தைத் திணித்த முறை மிக வருந்தத்தக்க பகுதியாகும். ஆங்கிலத்திலேயே எண்ணி, தங்கள் கருத்துக்களை முக்கியமாக ஆங்கிலத்திலேயே எடுத்து விளக்கும் முறையை ஆரம்பத்திலிருந்தே கொள்ளாதிருந்தார்களானல், ராம்மோகன்ராய் இன்னும் பெரிய சீர்திருத்தக்காரராயும், லோகமான்ய திலகர் இன்னும் பெரிய அறிவாளியாகவும் விளங்கியிருப்பார்கள். அவர்களால் மக்கள் அடைந்த பலன் - இப்பொழுதே வியக்கத் தக்கதாயிருந்தாலும். இன்னும் சிறந்திருக்கும், சிறிது இயற்கைக்கு முரணான முறையில் வளர்க்கப்படாதிருந்திருப்பார்களானல். ஆங்கில இலக்கியத்திலுள்ள வளமுள்ள கருவூலங்களால் அவர்கள் இலாபம் அடைந்தார்கள் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. ஆனல் இவைகள் அவர்களுடைய சொந்த மொழிகளால் அடையக் கூடியவைகளாய் இருந்திருக்க வேண்டும். மொழி பெயர்ப்பான இனத்தைப் பெற்றதனல் எந்த நாடும் நாடென்று போற்றப்படும் நிலையை அடைந்ததில்லை. ஆங்கிலத்திற்கு என்ன நேர்ந்திருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். அவர்களுக்கு அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட விவிலியப் பகுதி இல்லையானல், சைதன்யர், கபீர், நானக், குரு கோவிந்தசிங், சிவாஜி, பிரதாப் ஆகியோர் ராம் மோகன் ராய், திலகர் ஆகியோரைவிடப் பெரியவர்கள் என்று நம்பத்தான் நம்புகிறேன் ; ஒப்புமை வெறுக்கத் தகுந்தது என்பது எனக்குத் தெரியும் ; எல்லோரும் அவரவர்கள் வழியில் பெரியவர்கள் ; ஆனல் விளைவுகளை மதிப்பிடும்போது, பொதுமக்கள் ராம்மோகன், திலகர்களால் பெற்ற பலன்கள், வாய்ப்புப்பெற்ற மற்றவர்களுடையவற்றைப் போல, அவ்வளவு நிரந்தரமானதும் மிகப் பயன்பெறத் தக்கதாயும் இல்லை. அவர்கள் எதிர்த்து முன்னேறவேண்டியிருந்த முட்டுக்கட்டைகளை நோக்குமிடத்து அவர்கள் மிக வல்லவர்கள்தான். அவர்கள் தாங்களடைந்த பலன்களால் இன்னும் சிறந்தவர்களாயிருந்திருப்பார்கள் - அவர்கள் பழக்கப்படுத்தப்பட்ட முறையில் கொண்டு வரப்படாதிருந்திருப்பார்களானல். ஆங்கிலமொழி அறிவில்லாவிட்டால் இத்தகைய உயர்ந்த எண்ணங்களை ராஜாவும் லோகமான்யரும் எண்ணியிருக்கமாட்டார்கள் என்பதை நம்ப

போரில் தலைப்பட்டுழைத்தார்கள். அப்போருள் இன்னுயிர் துறந்தவருள் பலர் தமிழர் ; சிறை சென்றவருள் பலர் தமிழர்.

—திரு. வி. க. —மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்

மறுக்கிறேன். இந்தியாவைப் பாதிக்கும் எல்லாம் மூடநம்பிக்கைகளிலும் இழிந்த மூடநம்பிக்கை - திருத்தமுற்ற எண்ணங்களை வளர்க்கவும் உரிமை பற்றிய கருத்துக்களைப் பெறவும் ஆங்கிலம் அவசியம் என்பதும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் நாட்டின் முன் ஒரு ஒரே கல்வி முறைதான் இருந்தது என்பதும் ஒரே துறையான உணர்த்தும் ஆற்றல் தான் இந்நாட்டின்மீது திணிக்கப்பட்டது என்பதும் நினைவில் வைக்கற்பாலன. இப்போதிருக்கும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் எந்த முறையை நாமாகவிருந்தால் கையாண்டிருப்போம் என்பதுபற்றித் திட்டவட்டமாகக் கூற நம்மிடம் ஒன்றும் போதிய சான்றில்லை. எப்படியிருந்தபோதிலும், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட இன்று இந்தியா வறுமையுற்றிருக்கிறது என்பதும், தன்னைக் காத்துக் கொள்ளும் ஆற்றலில் குறைவுற்றிருக்கிறது என்பதும், அதன் குழந்தைகள் குறைந்த உயிர்ப்புச் சக்தியைத்தான் பெற்றிருக்கிறார்கள் என்பதும் தெரியத்தான் செய்கின்றன. அரசாங்க முறையிலுள்ள குற்றம்தான் இதற்குக் காரணம் என்பதை எனக்குக் கூறவேண்டிய அவசியமில்லை. கல்வி முறை அதனுடைய மிகப் பிழைபட்ட பகுதியாகும். அது எண்ணப்பட்டதும் உருவாகியதும் பிழையிலேயே; ஏனெனில் இந்நாட்டு முறை பயனற்றதுமட்டுமல்ல, இழிந்ததுங்கூட என்று ஆங்கில ஆட்சியாளர்கள் உண்மையாகவே எண்ணினார்கள். அது 'பாவம்' என்னும் பாதுகாப்பில் வளர்க்கப்பட்டது. ஏனென்றால் இந்திய உடல், உள்ளம், உயிர் அனைத்தும் மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது மிக இழிந்ததாகத் தோன்ற வேண்டும் என்ற எண்ணத்திலே வளர்க்கப்பட்டதே அம்முறை.

இன்று ஆங்கிலம் அதனுடைய வணிக மதிப்பு நோக்கியும் அரசியல் மதிப்பு என்று கருதப்பட்ட மதிப்பு நோக்கியும் படிக்கப்படுகிறது. நம்முடைய பிள்ளைகள் (தற்காலச் சூழ்நிலையை நோக்கச் சரியானதுதான்). ஆங்கிலமின்றி அரசாங்க ஊழியம் பெறமுடியாதென்றெண்ணுகிறார்கள். மணமென்னும் நாட்டிற்குச் செல்லத் தரப்படும் அனுமதிச் சீட்டாக ஆங்கிலம் நமது பெண்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. ஆங்கிலேயர்களுடன் ஆங்கிலத்தில் பேசுவதற்காகவே ஆங்கிலம் படிக்கும் பெண்களில் எத்தனையோ பெயர்களை எடுத்துக் காட்டமுடியும். தங்கள் மனைவியர் தங்களோடும் தங்கள் நண்பர்களோடும் ஆங்கிலத்தில் பேசமுடியவில்லையே என்று வருந்தும் எத்தனையோ கணவர்களை அறிவேன். எத்தனையோ குடும்பங்களில் ஆங்கிலம் தாய்மொழியாக அமைக்கப்படுதலை அறிவேன். நூற்றுக் கணக்கான இளைஞர்கள் இந்தியாவிற்கு உரிமை, ஆங்கில அறிவு இல்லாவிட்டால், நடைமுறையில் பெற இயலாத தொன்று என்று நம்புகிறார்கள். இந்தத் தவறான செல்வாக்கு சமூகத்தை அவ்வளவு தொலைவு அரித்திருக்கிறது—பல நேரங்களில் கல்வி என்றாலே ஆங்கிலத்தை அறிதல் என்ற அளவுக்கு அரித்திருக்கிறது. இவைகள் எல்லாம் நம்முடைய அடிமைத்தனத்தையும் இழிநிலையையும்

எடுத்துக்காட்டும் அடையாளங்கள் என்றே எனக்குத் தோன்றுகின்றன. நாட்டு மொழிகள் முன்னைப் போலவே இன்னும் நசுக்கப்படுதலையும் இழிக்கப்படுதலையும் என்னால் பொறுக்க முடியவில்லை. பெற்றோர்கள் குழந்தைகளுக்கும் காதலர்கள் மனைவியர்களுக்கும் தங்கள் மொழியல்லாது ஆங்கிலத்தில் எழுதுதலை என்னால் பொறுக்க முடியாது.

என்னுடைய வீட்டைச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் மதில்கள் எழுப்பப்படுவதையோ என்னுடைய சாளரங்கள் அடைக்கப்படுவதையோ நான் விரும்பவில்லை. என்னுடைய வீட்டைச்சுற்றி எல்லா நாட்டு நாகரீக மணமும் எவ்வளவு தடையின்றி வீசமுடியுமோ அவ்வளவு தடையின்றி வீசவேண்டும் என்றே விரும்புகிறேன். ஆனால், அவற்றில் ஒன்றினாலும் நான் அடியோடு வீசப்படுதலை மறுக்கிறேன். மற்ற மக்களின் வீடுகளில் இலாபங் கருதி நுழைந்து கொள்பவனாகவோ, பிச்சைக்காரனாகவோ, அடிமையாகவோ வாழ மறுக்கிறேன். போலிப் பெருமைக்காகவோ, ஐயப்படக் கூடிய சமூக நன்மைக்காகவோ என்னுடைய சகோதரிகள் மீது ஆங்கிலங் கற்றல் என்ற வீணை துன்பத்தைச் சுமத்த மறுக்கிறேன். இலக்கியச் சுவைக்காகவோ ஆங்கிலமும் அவர்கள் விரும்பும் ஏனைய உலகமொழிகளையும் கற்று அதனால் அடைந்த பயனை, ஒரு போஸ், ஒரு ரே, ஒரு தாகூரைப்போல இந்தியாவிற்கும் உலகத்திற்கும் தரவேண்டும் என்று எதிர்பார்க்கப் படும் காளைகளும் கன்னியர்களும் வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் நான் ஒரு இந்தியனையாவது தன்னுடைய தாய்மொழியை மறக்கவோ, அலட்சியம் செய்யவோ, தாய்மொழியைப்பற்றி வெட்கப் படவோ, தாய்மொழியில் தன்னுடைய சிறந்த எண்ணங்களை வெளிப் படுத்த முடியாது என்று கருதவோ விரும்பவில்லை. சிறைக்கடங்கும் மதமல்ல என்னுடையது. கடவுள் படைப்பில், மிகச் சிறியதிற்கும் அதில் இடம் உண்டு. ஆனால் அது கையாண்டி, இனச் செறுக்கு, சமயச் செறுக்கு, நிறச் செறுக்கு ஆகியவைகளுக்கு நேர்மாறானது.

அந்நிய ஆட்சியின் பல தீமைகளில் - இந்நாட்டு இளைஞர்கள் மீது எல்லாக் கருத்துக்களையும் விளக்கும் வாயிலாக அந்நிய மொழியாகிய இந்தக் கேடு நல்கும் செல்வாக்கைச் சுமத்தியது மிகப் பெரியவற்றுள் ஒன்றாக - வரலாறு கருதும். அது நாட்டின் உயிர்ப்புச் சக்தியில் மெதுவாக நம்பிக்கையை இழக்கச் செய்தது; மக்களின் வாழ்க்கையைச் சுருக்கிவிட்டது; பொது மக்களிடமிருந்து ஒதுங்கி வாழச் செய்தது. கல்வியை வீணான செலவாக்கியது. இந்த முறையைக் கையாளுவதில் இன்னும் விடாப்பிடியாய் இருப்பார்களானால், அது நாட்டின் உயிர் நாடியையே கொள்ளை கொள்ளும். ஆகவே அந்நிய மொழியாகிய மாயவலையைப் படித்த இந்தியா எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரத்தில் அறுத்துக்கொள்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கும் பிற மக்களுக்கும் நன்மை ஏற்படும்.

—"இந்தியா என் கனவில்" - தமிழாக்கம் : க. திருநாவுக்கரசு

காந்தியாருக்கு ஞாபகச் சின்னம்

பெரியார் ஈ. வெ. ராமசாமி, அனைத்திந்திய காங்கரஸ் காரியக் கமிட்டிக்கும் பண்டித நேரு, ராஜகோபாலாச்சாரியார், பட்டேல், ராஜேந்திரப் பிரசாத், ஜயப்பிரகாஷ் நாராயணன், ஆகியோருக்கும் காந்தியாரின் முடிவு சம்பந்தமாய் அவருக்கு நினைவுக் குறி ஏற்படுத்துவதைப் பற்றி அடியிற் கண்டபடி தன்னுடைய ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறார் :—

காந்தியாருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது அவசியம். அது நிரந்தரமானதாகவும், அதிசயமான பயனுள்ளதாகவும் இருக்கவேண்டும். அதற்கு என் தாழ்மையான யோசனை :

1. இந்தியாவுக்கு ஹிந்துஸ்தான் என்கிற பெயருக்குப் பதிலாக காந்தி நாடு அல்லது காந்தீஸ்தான் என்று பெயரிடலாம்.

2. இந்து மதம் என்பதற்குப் பதிலாகக் காந்தி சமயம் அல்லது காந்தினிசம் (காந்தியம்) என்று மாற்றலாம்.

3. இந்துக்கள் என்பதற்குப் பதிலாக மெய்ஞ்ஞானிகள் அல்லது சத்ஞானஜன் (காந்தீயர்) என்று பெயர் மாற்றலாம்.

4. காந்தி சமயக் கொள்கையாக இந்தியாவில் ஒரே பிரிவு மக்கள் தான் உளர். வர்ணாஸ்ரம தர்மமுறை அநுசரிக்கப்படமாட்டாது. ஞானமும் அறிவும், பட்சமும் (அன்பும்) அடிப்படையாகக் கொண்டது. சத்து அதாவது சத்தியமே நித்தியமானது என்பதான சன்மார்க்கங்களைக் கொண்டதாகும் என்பதாக ஏற்படுத்தி, கிருஸ்து ஆண்டு என்பதற்குப் பதிலாகக் காந்தி ஆண்டு என்று துவக்கலாம்.

இப்படிப்பட்ட காரியங்கள் செய்வதனால்தான் காந்தியார், புத்தர் கிருஸ்து, மகம்மது முதலிய பெரியார்களுக்கு ஒப்பானவராகவும், இன்றைய நிலைமைக்குத் தோன்றிய ஓர் சீர்திருத்த மகான் ஆகவும் உலகமே கருதும்படியான நிலை ஏற்படும். உலக மக்களால் நாம் நன்கு மதிக்கப்படுவோம். இந்தியாவுக்குச் சாபக்கேடு என்று எது எது சொல்லி வரப்பட்டனவோ அவையெல்லாம் மறைந்துவிடும். ஆர்ய சமாஜ், சீக் சமாஜ், பிரம்ம சமாஜ முதலிய எத்தனையோ புதிய மார்க்கங்கள் (கொள்கைகள்) ஏற்பட்டும் ஒன்றும் இந்தியாவை வெற்றி கொள்ளவில்லை. ஆனால் பௌத்த மதம், கிறிஸ்து மதம், முகம்மதிய மதங்கள் ஆகியவை வெற்றி பெற்றுவிட்டன. இதன் காரணம் இவை அரசாங்க மதங்களாய் இருந்து வருவதேயாகும். ஹிந்துஸ்தான் முப்பது கோடிக்கு மேற்கொண்ட மக்களைக் கொண்டது. அதன் அரசியல் திட்டமாக

காந்தீயம் ஏற்பட்டு விடுமானல் கண்டிப்பாக வெற்றிபெற்றே தீரும் இன்றைய முட்டாள் தனமும் மூர்க்கத்தனமும் ஆன கொலைப்பாதகப் பேயாட்டங்கள் இனி நடைபெற முடியாமலும் போகும்.

பெயர் மாறுதல்கள் காரணமாய் மதங்களுக்கும் தேசங்களுக்கும் கொள்கை பெயர் மாற்றங்கள் ஏற்படுவது சகஜமாகவே இருந்து வந்திருக்கிறது. உதாரணமாகப் புத்தர், அசோகர் காலத்தில் ஏற்பட்ட மதக் கோட்பாடு மாறுதல்களும் ரஷியா, ஸையாம் முதலிய நாடுகளுக்கு ஏற்பட்ட சோவியத் லேண்ட், தாய் லேண்ட் போன்ற பேர்களும் எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். மற்றப்படியாக சிறு ஊர்களுக்குப் பெயர் மாற்றுவதும் பெருந் தொகையாகப் பணம் வசூல் செய்து அதன் மூலம் சில பொதுநலக் காரியங்கள் செய்வதும் காந்தியாருக்கு நாம் ஏதோ நன்றி காட்டினதாகத்தான் வந்து முடியுமே தவிர காந்தியாரால் உலகத்துக்கு—நம் நாட்டுக்கு—அதாவது மற்ற நாட்டாரால் தாழ்மையாகக் கருதப்பட்ட சரித்திர பிரசித்தமுள்ள நாட்டுக்கு ஏற்பட்ட மகா மேன்மையான காரியம் என்னவென்பதற்கு நல்ல ஆதாரம் இல்லாமல் போய்விடுகிறது. ஒருவரை மகான், க்ரேட் மேன்—Great Man—என்றால் அவரால் ஏற்பட்ட நிரந்தரமான பெரிய காரியம் ஒன்று இருந்தாக வேண்டுமே ஒழிய அவர் காலத்தில் இன்னின்ன காரியம், அற்புதம், அதிசயம் நடந்தன என்பவை பிற்கால மக்களுக்குப் பயன் படுவதானதாக ஆகிவிடாது. இது எனது தாழ்மையான அபிப்பிராயம். கொள்ளவும், தள்ளவும், திருத்தவும், மாற்றவும் உங்களுக்கு முழு உரிமை உண்டு.

இதற்கு இது ஒரு நல்ல சமயம். நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்தியாவின் ஒரு பாகமாகிய சிந்துவுக்கு இன்று பாகிஸ்தான் என்ற பெயர் ஏற்பட்டிருப்பதுபோல் இந்தியாவின் பெயரும் மாற்றப் படலாம். இந்து என்பதும் இந்தியா என்பதும் அந்நியர்கள் நமக்கும் நம் நாட்டிற்கும் கொடுத்த பெயர். (அதுவும் சிந்து நதி காரணமாக ஏற்பட்ட பெயர்) என்பதை எல்லா அறிஞர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். காந்தியாரும் இதைச் சமீபத்தில் சொல்லியிருக்கிறார். இந்து மதம் என்பதாக ஒரு மதமும் இல்லை. ஆகவே இந்தப்படியான மாற்றம் காந்தியார் உயிர்ப்பலியின் காரணமாக ஏற்பட்டு விடுமானல், இனி இங்கு மத சமுதாய ஜாதி சம்பந்தமாக எந்த பிரச்னையும் சுலபத்தில் காணமுடியாது. 30 கோடி மக்களும் ஞானவான்களாக ஒரே சமுதாய மக்களாக உலகத்தின்முன் திகழ்வார்கள்.

சென்னை, 9—2—48. —ஈ. வே. ராமசாமி

லண்டனில் தமிழ்ச் சங்கம்

விக்டர் கார்டன்

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்' என்ற உணர்ச்சி மேலீட்டால் லண்டனில் வதியும் தமிழ் மாணவர்கள் ஒன்றுகூடி லண்டனில் தமிழ்ச் சங்கமொன்றை நிறுவியுள்ளனர். இச் சங்கத்தில் லண்டனிலுள்ள சகல தமிழ் மாணவர்களும் இலங்கையிலிருந்து வந்துள்ள மாணவர்களும், தமிழ் மொழியில் ஆர்வம் கொண்டுள்ள இதரர்களும் அங்கத்தினர்களாகச் சேர்ந்துள்ளனர். இச் சங்கம் கடந்த சில வாரங்களுக்கு முன்புதான் நிறுவப்பட்டதென்றாலும் இதன் அங்கத்தினர்களின் தொகை நூற்றைம்பதையும் தாண்டிவிட்டது.

லண்டனில் இதற்குமுன் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டதென்றாலும் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் காரணமாக அச்சங்கத்தின் அலுவல்கள் தடைப்பட்டன. அச்சங்கமே தற்போது புத்துயிர் பெற்றுள்ளது. லண்டனிலுள்ள தமிழ் மாணவர்களும் தமிழ் மொழியில் ஆர்வமுள்ளவர்களும் ஒன்றுகூடும் 'சந்திப்பு நிலய'மாகவும் இத் தமிழ்ச் சங்கம் விளங்குகிறது.

லண்டனில் ஒரு தமிழ்ச் சங்கம் அவசியமென்பதை உணர்ந்து அதை நிறுவும் பணியிலும் பெரும் பங்கு ஏற்றுக்கொண்ட திரு. எஸ். செல்லசாமி இதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். "சிறந்த இலக்கியங்களைத் தன்னகத்தே அடக்கியுள்ளதும் மிகப் பழமையானதுமான தமிழ் மொழியின் மகத்துவத்தை ஆங்கில மக்களுக்கு எடுத்துரைக்கவும், தமிழ் மொழியில் அவர்களுக்கு ஆர்வத்தை உண்டாக்கவும் நாங்கள் விரும்புகிறோம்" என திரு. செல்லசாமி எனக்களித்த ஒரு பிரத்யேக பேட்டியில் கூறினார். பொதுவாகச் சகல தமிழ்த் திருநாட்களும் இச் சங்கத்தாரால் கொண்டாடப்படுகின்றன.

மொழி பெயர்க்கும் பணி

'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்ற கவிக்கிணங்க பிரிட்டனிலுள்ள சகல வைத்திய சட்ட நூல்களையும் தமிழில் மொழி பெயர்க்கும் அரும் பெரும் பணியையும் லண்டன் தமிழ்ச் சங்கம் மேற்கொள்ளலாமென திரு. செல்லசாமி வெளியிட்டுள்ளார். அத்துடன் பிரிட்டிஷ் வானொலி நிலையம் (பி.பி.ஸி.) கீழ்த்திசை நாடுகளுக்கு ஒலிபரப்பும் தமிழ் நிகழ்ச்சிகளிலும் இச் சங்கத்தின் அங்கத்தினர்கள் பெருமளவில் பங்கு பற்றுவார்கள்.

தமிழ்ச் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டங்களில் சொற்பொழிவுகள் செய்வதற்காகப் பிரிட்டனிலுள்ள தமிழ்க் கலைஞர்களை அழைப்பதென

ஆராய்ச்சிப் பகுதி :

நல்லும் சொல்லாதோ கதை

சி. வேலாயுதம் M.A., L.T.

‘‘ஒரு சமயம் கடவுளுக்கு அருள் மேலீட்டாலோ விளையாட்டு விருப்பத்தாலோ தான் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் போல் தோன்றிற்று. தன்னைச் சூழ்ந்திருந்த அந்தகாரத்தில் ஒன்றும் செய்ய முடியாதாகையால் ஒளி உண்டாகுக என்றார். வெளிச்சம் தோன்றிற்று. வெளிச்சத்தையும் இருட்டையும் பிரித்துப் பகல் என்றும் இரவு என்றும் வரையறை செய்து, இரண்டும் சேர்ந்ததை ஒருநாள் என்று கணக்கிட்டார். மூன்றாம் நாள் நிலம் தோன்றுக என்றார். தோன்றிற்று. அதன்மேல் புல்லையும் செடியையும் கனிதரும் மரங்களையும் படைத்தார். ஐந்தாம் நாள் பெரும் பறவைகளும் பருமீன்களும் தோன்றின. ஆறாம் நாளில் ஆடுமாடுகளையும் பிற ஊர்வனவற்றையும் படைத்தார். இவை பகுத்தறிவற்றுத் தங்களுள் பொருதும் இயற்கையை அழித்தும் வாழ்ந்தது கண்டு அருவருப்புற்றுத் தன்வனப்புள்ள படைப்பைக் காத்து இன்புறும் மனிதனை உண்டாக்கினார். தன் ஆற்றலில் ஒரு பகுதியும் கொடுத்து அவனுக்குத் துணையாக ஒரு பெண்ணையும் படைத்தார்.’

இப்படியாகக் கடவுள் அருள் விளையாட்டாக ஐந்தாறு நாட்களிலே அகிலமெலாம் தோன்றிற்றென்பது நம் மதநூல்களில் காணும் படைப்பு வரலாறு. சிற்சிலவற்றில் வேறுபாடு காணப்படினும் எல்லா மதங்களிலும் ஏறக்குறைய ஒரேமாதிரி வரலாறே காணப்படுகின்றது. மேற்கூறியது விவிலிய நூலில் காணப்படுவது. இவ்வரலாறு 4500 ஆண்டுகளுக்குமுன் யூதர்களால் பாபிலோனியாவிலிருந்து அசிரியா பாலஸ்தீன

வும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பிஷப் ஓநியல் அவர்கள் தமிழ்ச் சங்கத்தின் முதலாவது மதாந்திரக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துச் சொற்பொழிவாற்றுவார்.

திரு. வ. அளகப்பன் இச் சங்கத்தின் காரியதரிசியாவார். பிரிட்டனின் இதர பகுதிகளில் வதியும் தமிழர்களுக்கென பிரிட்டனிலுள்ள இதர சகல நகரங்களிலும் விரைவில் இம்மாதிரித் தமிழ்ச் சங்கங்கள் நிறுவவும் லண்டன் சங்கம் ஆலோசித்து வருகிறது. லண்டன் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டுள்ள இவர்கள் இதை ஆவலுடன் வரவேற்பார்களென்பதில் ஐயமில்லை.

வளர்க தமிழ்ச் சங்கம் !

—British Information Society

மூதலிய நாடுகளுக்குப் பரப்பப்பட்ட ஒரு வரலாற்றை ஒத்திருக்கின்றதாம். ஆகவே ஒருவேளை கர்ண பரம்பரையாக வந்து அவ்வாறு காலடைவில் உருமாறி, கி. மு. 5, 6 நூற்றாண்டில் எழுதப்பட்ட விவிலிய நூல் பழைய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்குமோ என்று கருதுகிறார்கள். சமீப காலத்திலே உண்டான நூல்களிலேயும் எவ்வளவோ இடைச் செருகல்கள் ஏற்பட்டு, புராதன உண்மையை அறிய முடியாது தவிக்கிறோம். மிகவும் பழமையான உலகத் தோற்ற முறையின் உண்மையை இப்புராண வரலாற்றால் நாம் எப்படி அறிவது ? நம் மத நூல்களில் கண்டவைகள் நம்பக்கூடியனவாக இல்லையே.

கல்வியல் நூலாரே நமக்கு இந்த விஷயத்தில் உதவி செய்துள்ளார்கள். அவர்கள் கேட்க, கற்கள், உலக உற்பத்தி, உலக வளர்ச்சி முதலியன பற்றிய விசித்திர விஷயங்களைக் கூறுகின்றனர். கேட்பார் கேட்டால் கல்லும் கதை சொல்லும். முதன்மையாக, கல்லாராய்ச்சி உலக உற்பத்தியான காலத்தை ஒருவாறு கணிக்க உதவுகிறது. இவ்வாராய்ச்சியாளர் கையாளும் முறைகள் சிறந்துகொண்டே வந்திருக்கின்றன.

சின்னாட்களுக்குமுன் கைவந்த முறை, வண்டல் மண்ணினால் ஆக்கப்பட்ட கற்களின் கடினத்தைக் கொண்டு, உலக வயதை அளவிடுவதாகும். பன்னூறு கோடி ஆண்டுகளுக்குமுன் பூமியின் பெரும் பகுதி நீர் பரப்புடையதாயிருந்தது. நிலமாய் மேல்நின்ற கல் பகுதி காற்றாலும் மழையாலும் பனியாலும் அரிக்கப்பட்டு, அத்தூள்கள் கடலில் சென்று வீழ்ந்தன. பிற்காலத்தில் ஏற்பட்ட பெரிய பூகம்பங்களிலும் நெகிழ்ச்சிகளிலும், கடல் கீழிருந்தவாறே உறுதிப்பட்ட, வண்டல் மண்ணாலாகிய கற்கள் மேல் வந்தன. தற்போது பூமியின் நிலப்பரப்பில் முக்கால் பங்குக்குமேல் இப்படி நீர்க்கீழ் படிந்து கெட்டிப்பட்ட வண்டல் கற்களே காணப்படுகின்றன. இவ்வண்டலின் ஆழத்தை அளந்து, அதிலிருந்து இவை படிய எவ்வளவு காலமாகி இருக்குமென்று கணிக்கலாம்.

இப்படிக் கணக்கிடுவதற்குத் தெரியவேண்டிய விஷயங்கள் :— (1) கடலில் படிந்த வண்டலின் கனம். (2) வண்டல் படிந்த வேகம். உதாரணமாக ஓர் அங்குல உயரம் மண் படிய எவ்வளவு காலம் ஆகும் என்பது. இதை அறிய 1. ஒரு குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு மண்கள் தரையிலிருந்து கடலுள் புகுகின்றன ? 2. இந்த வண்டல்கள் படிந்த இடம் எவ்வளவு விசாலமானது ? என்ற இரண்டும் நிர்ணயிக்கப்பட வேண்டும். இவைகளை ஒருவாறு நிர்ணயித்திருக்கிறார்கள். பெரிய ஆறுகளில் அடித்துப் போகப்பட்ட தூள்களை ஒருவாறு அளவிட்டு, அதைக் கொண்டு உலகத்தில் ஒருவருஷ காலத்தில் கடலைச் சேரும் தூள்கள் எவ்வளவிருக்கும் என்று கணக்கிட முயன்றிருக்கிறார்கள். இதுபற்றிய ஆராய்ச்சியாளர்களின் மதிப்புகள் 1000 கோடி டன் முதல் 2000 கோடி டன் வரையில் செல்கின்றன. இருந்தும் இவைகளுக்கு கிடையில் எந்த

எண்ணிக்கையை ஏற்றுக் கொண்டாலும் கடலில் மண்படிந்த இடத்தின் அகலத்தையும் அளவிடவேண்டி இருக்கிறது. இதைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள் தக்க கருவிகளை உபயோகித்துக் கடலுள் மண்ணைத் துருவி எடுத்து ஆராய்ந்து, கடற்கரை ஓரங்களிலேதான் வண்டல் மண் கள் விழுகின்றன, ஆகவே அவைகளின் விஸ்தீரணத்தை அளந்தால் போதுமென்று முடிவு செய்து, இதையும் ஒருவாறு கணித்திருக்கின்றனர் கள். ஒரு வருஷத்தில் ஆறுகள் அடித்துக்கொண்டு செல்லும் வண்டலின் பரிமாணத்தை இந்த விஸ்தீரணத்தால் வகுத்தால் கடலோரத்தில் ஆண்டுதோறும் எவ்வளவு வண்டல் குவிகின்றன என்றது தெரியும். அதாவது வண்டல் படியும் வேகம் தெரியும்.

அடுத்தபடி உலகத்தில் இதுவரை படிந்த வண்டல் கற்களின் கனத்தை நிர்ணயிக்க வேண்டும். இது சிரமமான காரியம். இது தெரிந்தால், அதை மண் படியும் வேகத்தில் வகுத்து, உலகத்தில் கடல் தோன்றிய காலத்தை நிர்ணயிக்கலாம். இந்தக் கனத்தைக் கணிப்பது கஷ்டமென்பதேனென்றால் உலகின் எந்தப் பாகத்திலும் அவை ஆதியி லிருந்து படிந்தவாறே கிடக்கவில்லை. பூமி அதிர்ச்சி, நெகிழ்வுக் காலங் களில் பிளந்தும், முறுக்கியும் இடம் பெயர்ந்தும் இருக்கின்றன. ஆகை யால் பல இடங்களில் காணப்படும் வண்டற் கற்களை ஆராய்ந்து காலக் கிரமப்படி வரிசைப்படுத்தி மொத்த கனத்தை நிர்ணயிக்க வேண்டும். இப்படிச் செய்த ஒருவரின் முடிவுப்படி உலகில் உயிர் தோன்றிய நாளாய்ப் படிந்த வண்டலின் கனம் 56 மைல். மேல்கண்ட வண்டல் படியும் வேகத்தால் இந்தக் கனத்தை வகுத்தால் நமக்குக் கிடைப்பது உலகின் வயது. ஆனால் சென்ற 70 வருஷங்களில் ஆராய்ச்சி செய்த 14 பேர்கள், 7 கோடி முதல் 200 கோடி வருஷங்கள் வரைக்கும் மாறு பட்ட பல முடிவைக் கொடுத்திருக்கிறார்கள். இது எதிர்பார்க்கக் கூடியதே. நாம் கணக்கிடுவதற்கு வேண்டிய விவரங்கள் இன்னும் சரியாக் கிடைக்கவில்லை என்பதற்கிதுவே அத்தாட்சி. ஒவ்வொரு புது ஆராய்ச்சியாளரும், முன்னையவரைவிட, அதிக கால எல்லை காட்டும் முடிவுக்கே வந்திருக்கிறார்கள். இன்னும் எதிர்கால ஆராய்ச்சியால் உலக வயது அதிகப்படுமே ஒழியக் குறைக்க வராது. எந்தப் புள்ளியை எடுத்துக் கொண்டாலும், நம் மத நூல்கள் கூறுவதுபோல பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்தான் உலகம் தோன்றிற்று எனக்கூற இடமில்லை. இந்தக் கோடிக் கணக்கில்வரும் ஹேஷியங்களும் உலக வயதைப் பற்றியன அல்ல. உலகில் உயிர் வர்க்கம் தோன்றியது முதலாகிய காலத்தையே கணிக்கின்றன. இதுவே பலகோடி நூறுபிரமாண்டு களாகிறது. தவிர உள்ளது சிறத்தல் என்ற கொள்கைகளை உடைய தாவர நூல் பிராணி நூலாரும் உடல்கூறு வளர்ச்சியைக் கருதி உயிர் வர்க்கம் தோன்றிப் பலகோடி ஆண்டுகளாகி இருக்கும் என்றே கூறி வந்திருக்கின்றனர். டார்வினும் நிலத்தில் உயிர் தோன்றி 10 கோடி ஆண்டுகளாவது ஆகி இருக்கும் என்று திடமாக நம்பினர்.

இன்னொரு முறையாலும் உலக வயதை நிர்ணயிக்க முயன்றிருக்கின்றார்கள். ஒரு காலத்தில் பூமி ஒரு நெருப்புருண்டையாக இருந்து குளிர்ந்தபோது கடல் உண்டாயிற்று. அக்கடல்நீர் அப்போது உப்புச் சுவையோடிருக்கவில்லை. பிற்காலத்திலேதான் கற்களில் உள்ள உப்புச் சத்து கரைந்து ஆற்றோடு சென்று கடலை நாளடைவில் மேன்மேலும் உப்பு நீராக்கிவிட்டது. ஆகவே கடல் தண்ணீரில் உள்ள உப்பின் எடையை நிர்ணயிக்கலாம். ஒரு அவுன்சு அல்லது பவுண்டு கடல் ஜலத்தில் எத்தனை சதவீதம் உப்பிருக்கிறது என்று நீரைக் காய்ச்சிக் கண்டு பிடித்து, மொத்த சமுத்திரஜல பரிமாணத்தில் எவ்வளவு உப்பிருக்கும் என்று காண்பது சுலபம். பின்பு சிறிது கஷ்டத்தோடே ஒரு வருஷகாலத்தில் கடலுள் ஆறுகள் கொண்டுபோகக் கூடிய உப்பு எவ்வளவு என்பதை ஆறுகளின் ஜல பரிமாணத்தையும் உப்பு வீதத்தையும் கொண்டு நிர்ணயிக்கலாம். இப்படிப் பார்க்கும்போது இப்போது கடலுள் காணப்படும் உப்பை ஒன்று அல்லது பத்துகோடி ஆண்டுகளில் பல ஆறுகளும் கொண்டுபோய்ச் சேர்த்து இருக்கவேண்டும். அத்தனை வருஷங்களாகின்றன கடல்கள் தோன்றி. அதற்குமுன் எத்தனை ஆண்டுகளாயிற்று கடல்கள் உருப்பெற, உலகம் குளிர என்பவற்றை எல்லாம் கணிக்க வழியில்லை.

ஆகவே, பூமிகுளிர ஆரம்பித்தே எவ்வளவு காலமாயிற்று என்று காணவேண்டியிருக்கின்றது.

அதிர்ஷ்ட வசமாக இதற்கும் ஒருமுறை சமீபத்தில் காணப்பட்டது. உருக்குக் கல்லில் யுரேனியம் என்ற ஒரு உலோகம் இருக்கிறது. அதிலிருந்து ரேடியம் உண்டாகிறது. ரேடியத்தின் ஒரு விசித்திர குணம் என்னவெனில் சதா அணுக்களாக சிதறிக்கொண்டே இருப்பது. இப்படிச் சிதறும்போது உஷ்ணமும் ஒளியும் உண்டாகின்றன. இருட்டிற் பார்க்கும் கடியார முட்களும் எழுத்துக்களும் இப்படிச் சிதறுவதால்தான் நம் கண்ணுக்கும் புலனாகின்றன. இப்படி ரேடியம் சிதறிப் போகும்போது அதிலிருந்து ஹீலியம் என்ற ஒரு புகை வஸ்து வெளியேறுகிறது. எஞ்சி நிற்பது காரீயம். இந்தமாதிரி யுரேனியம் ரேடியமாகி, அது பின் காரீயமாகப் பிரிந்து நிற்க எவ்வளவு ஆண்டுகளாகின்றன என்று நிர்ணயிக்க முடியும். ஒரு கல்லில் உள்ள யுரேனிய—காரீய விதாசாரத்தை எளிதில் நிர்ணயிக்க முடியும். இதைக்கொண்டு அதிக விதாச்சாரமுள்ள கற்கள் தோன்றி எவ்வளவு காலமாயிருக்கும் என்பதைக் கணிக்கலாம். இப்படிச் சில பழைய உருக்குக் கற்களை ஆராய்ந்து பார்த்ததில் சில கற்கள் 170 கோடி வருஷங்களுக்கு முன்னேயே தோன்றியவை என்று தெரிகிறது. சமீபத்தில் 200 கோடி வருஷங்களுக்கு முற்பட்டது உலகம் என்று இம்முறையைக் கொண்டு ஒருவர் நிர்ணயித்ததாகப் படித்தோம்.

ஆகவே உலகத்தின் வயதை அளக்க மனிதன் கண்ட சிறந்த முறை இதுவே. இதுவும் நிச்சயமாக எந்தப் புள்ளியையும் தரவில்லை.

ஆனல் முன்னைய முறைகளைவிட, உலகோற்பத்திக் கால எல்லையை முன் தள்ளிப் போட்டுவிட்டது. பொது முறையில் உலகம் மனிதன் எண்ணத்திற் கெட்டாத காலந்தொட்டு இருந்து வந்திருக்கிற தென்றதையே காட்டுகிறது. ஓர் ஆசிரியர் பூமியின் பழமையைக் காட்ட வந்தபோது கூறினர். "விவிலிய நூலின் கடைசியில் வரும் முற்றுப்புள்ளியை மாத்திரம் பார்த்துவிட்டு, நான் அந்நூல் முழுதும் படித்துவிட்டேன் என்று சொன்னல் அது எவ்வளவு பொருந்துமோ அவ்வளவே பூமியில் மனிதன் தோன்றியபின் நடந்த சரித்திரத்தை அறிந்து, அவ்வளவே உலகின் வரலாறு என்று நினைப்பதும்" என்ருர். உலகத்தில் தோன்றிய பொருள்களில் மிகச் சமீப காலத்தில் தோன்றியவற்றுள் மனிதன் ஒருவன். 200 கோடி ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங் குறித்த உலக வரலாற்றிலே மனிதன் தற்போதிய உருவை அடைந்து 2 கோடி ஆண்டுகளே ஆகின்றன. இதற்குப் பிற்பட்ட சரித்திரத்திலும் நமக்குச் சென்ற 5000 ஆண்டுகளைப் பற்றிய ஒரு சிற்றேடு மாத்திரமே புதைநூலாராய்ச்சியாளரால் கிடைத்திருக்கின்றது. மனிதன் தோற்றத்துக்கு முற்பட்ட காலத்திய உலகின் வரலாற்றைப் பின்னர்க் காண்போம்.

(தொடரும்)

இந்தியாவின்
இணையற்ற
தயாரிப்பு !



ஜாப்கோ
-பவுன்டிங்-

ஜய பாரதம் கோ
மதராஸ் - பெங்களூர் - எர்ணகுளம்

நிலவின் வீக்கம்

தென்னாப்பிரிகா - டர்பன் - திரு.ச. மு. பிள்ளை

ஆண்டவன் அருள் குளிர்ச்சி உடையது என்பது நம் நாட்டுப் பெரியோர் கூற்று. திருநாவுக்கரசர் இறைவன் இணையடி நீழல் "மாலை மதியம் போலக் குளிர்ந் திருந்தது" என்று கூறுவராயின் இதனைவிட சந்திர இன்பத்திற்கு யாம் என்ன கூறுவது ?

மேற்றிசையில் செக்கர் வானத்தில் தோன்றிய மூன்றாம் பிறைச் சந்திரனைச் செஞ்சடைவானவன் திருமுடிமேலன்றோ வைத்து வணங்குகின்றோம்.

சந்திரன், மண்ணுலகத்தில் தவழ்ந்தவுடன் இம்மண்டலமே புதியதோர் பொலிவு பெற்று விளங்குகின்றது. மரங்களின் பசிய இலைகளெல்லாம் பளபளவென மின்னுகின்றன. பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களும் புதுமையடைகின்றன.

இக்காட்சியைக் கண்ட கம்பன், பிரமன் படைத்த அண்டம் பழையதாயிற்று என்று, சந்திரன் என்னும் தச்சன் அதனைப் புதுக்குகின்றான் என்று மொழிந்தான்.

புலவர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட பொருள்களுள் முதன்மையானது சந்திரனே யாகும். காதலின்பம் பொங்குகின்ற இளங் கன்னிகையின் வதனத்திலே மட்டும் அச்சந்திரன் இன்பங் காணக்கூடும்.

கடலும் காட்சியின்பத்தில் உயர்ந்ததே. அக்கடலைப் பருவச் சந்திரன் நீலவானத்திலிருக்கும்போது பார்த்து மகிழ ஆயிரம் கண்கள் வேண்டும். கடலின் அழகுக்குச் சந்திரனது கதிர்கள் மெருகிடுகின்றன. அது அழகின்மேல் அழகு செய்வதாகின்றது. அழகுக்குத்தான் முடிவேது ? என்று நம்முள்ளம் திகைக்கின்றது.

நாம் பாற்கடலைப் புலவரது கற்பனை உலகிற் காண்கின்றோம். சந்திரன் சாதாரண உவர்க்கடலைத் தனது கதிர்களால் பாற்கடலாக்கிக் காட்டுகின்றது. சந்திரன் தவழும் குன்றங்கள் வெள்ளிமலைகள் போல் விளங்குகின்றன. எளிய காட்டாறுகள்தான் எத்தனை அழகாகச் சந்திரனால் விளங்குகின்றன. ஒவ்வொன்றும் கடவுள் நதியாகிய கங்கை போல் காணப்படுகின்றன. இவ்வரிய காட்சியனைத்தும் ஒருங்கே கண்டான் கம்பன் ! அக்காட்சியைச் செய்யுளமுதத்துடன் சேர்த்து நமக் களிக்கின்றான்.

> " ஆறெலாம் கங்கையே ஆய, ஆழிதான்
> கூறுபாற் கடலையே ஒத்த குன்றெலாம்
> ஈறிலான் கைலையே இயைந்த என்னினி
> வேறுயாம் உரைப்பது நிலவின் வீக்கமே !"

இவ்வளவு அழகான செய்யுளும் அவ்வின்பத்தைக் காட்டப் போதியதாகவில்லையாம் ! என்னினி வேறு கூறுவது ? என்று தன்னாற் கூறமுடியாது என்றே கூறிவிட்டான்.

சந்திரன் தவழும் இராக்காலங்களில் தெருவில் என்ன காண்கின்றோம்? அக் குழந்தைகள் ஏன் அப்படித் துள்ளிக் குதிக்கின்றன? அவைகளின் இருதயத்தைச் சந்திரனது கதிர்கள் தழுவிவிட்டன. ஏன் நமக்கித்தனை இன்பம் என்பதை அக்குழந்தைகள் ஆராயவில்லை. அவ்வாராய்ச்சியில் இன்பத்தை இழந்துவிட விஞ்ஞான ஆராய்ச்சியாளர்க்கே தெரியும். அவர்கள் தண்கதிர் மண்டிலம் வெப்பமிக்க—நீர்மையற்ற—கரடு முரடான பாலைவனம் என்று கூறி முகத்தைச் சுளித்துக்கொள்ளட்டும். குழந்தைகள் இன்பம் மட்டுமே எய்துகின்றன.

அதோ பாருங்கள்! அப்பூங்கொடியின் புதல்வனை! அவளிடையிலே இருந்துகொண்டே "அச்சந்திரனைப் பிடித்துத்தா, அம்மா!" எனத் தனது மழலையில் மொழிகின்றான். அவன் தனது சிறு கைகளால் சந்திரனின் மேனியைத் தழுவவேண்டுமாம்! தன் அம்மையால் முடியாத காரியம் ஒன்றிருப்பதாக அம்மதலைக்கு எண்ணமில்லைபோலும்! அமிழ்தினுமினிய மழலைச் சொல்லிலும், அதனோடு சந்திரனது இன்பத்திலும் அந்நங்கை திளைக்கின்றாள். "நிலாவே! நிலாவே! இவனுடன் விளையாட வா! வந்தாயானால் உனக்கும் பால்தருவேன்" என்று அவள் கூறுவது உங்கள் செவிகளில் விழுகின்றதா? மழலைச் சொல் மாறாத பச்சைக் குழந்தைக்கு அவள் கூறும் பொய்ம்மொழியிலும், அப்பூங்கொடியின் உருவத்திலும் அவள் காணாமல், அவளின் பின்னர் நின்று கண்டு மகிழும் காதலனுக்கு இந்த நிலா ஓர் புதுமை காட்டுகின்றது. அக்காதலன் பெறும் இன்பத்தைவிட இம்மையில் எய்தும் இன்பம் வேறுமுளதோ?

சந்திரனின் விரிந்த கதிர்களையே உண்டு உடல் பூரிக்கும் பறவை ஒன்று இருக்கின்றதாம். சகோரம் என்னும் அப்பறவை அடையும் இன்பந்தான் எத்தகையதோ?

இச்சந்திரனது இன்பத்தைப் பரந்த புல்வெளியிலே அல்லது மணல் மேட்டிலே அமர்ந்து மாசற்ற வானவெளியிலே மிதந்து செல்லும் காட்சியை அநுபவிப்பதற்காகவே ஒருவன் உயிர் வாழலாம்.

'அதோடு மனதிற்கிசைந்த மாதரொடு காண்பவனுக்கு அச்சந்திரன் வெறியேற்றிவிடும் என்பதில் என்ன தடை? அதனாலன்றோ "கலந்தவர்க் கினியதோர் கள்" என்றான் கம்பன்! இத்தகைய இன்பப் பொருள் அவ்வளவும் துன்பமாக மாறிவிகின்றது. அது அப்பொருளின் குற்றமன்று. வெப்பு நோயுடையானுக்குப் பால் விஷமாகும். அது பாலின் குற்றமா? அதுபோலக் காதலர் பிரிந்து வாழ நேர்ந்தால் அவர்கள் சந்திரனால் துன்பமே யடைகின்றனர் என்பது, சந்திரனின் தோற்றத்தால் பொங்கியெழுந்த இன்ப உணர்ச்சியை ஆற்றமாட்டாமலன்றோ அவர்கள் இடர்ப்படுவது. இவ்வளவு இன்பப் பொருளாகிய சந்திரனின் தோற்றம் நம் கண்முன் தினந்தோறும் தோன்றுகின்றது. வாழ்க அத் திங்கள்!

இரு ஓவியங்கள்

கா. அ. சிவசங்கரன்

அவள் பிரிந்து செல்லும் பொழுது சந்தேகத்தின் மெல்லிய கோடுகள் அவள் மதிமுகத்தை வளைந்து நின்றதைக் கண்டேன். அவளது காதல் நிறைந்த கருவிழிகள், "என்னை வஞ்சனை செய்து விடாதீர்கள்" என்று கெஞ்சின. அவளது கண்களில் நிழலாடும் சந்தேகத்தின் சாயையானது அவளது அழகிய முகத்தை வீணாகப் பாழ்படுத்தியது. அவளது கண்ணிமைகள் காரணமற்று மூடி மூடித் திறந்துகொண்டன. அவள் தன் நெற்றியில் புரளும் கூந்தலை ஒதுக்கிய வண்ணம் என்னைக் கனிவு ததும்ப நோக்கியபடி சற்று நேரம் நின்றாள். பின்பு நான் வந்தபோது வைத்து வளர்த்த 'காட்டு ரோஜா' மலர்ச் செடியை வெளிச் சென்ற பார்வையுடன் நோக்கினாள். காட்சியாக இருந்த ஒரே ஒரு ரோஜா மலரை நான் செடியிலிருந்து எடுத்து அவளது கூந்தலில் செருகினேன். அவள் மெல்ல நடந்து சென்றாள்; ஆனால் அவள் நடையில் தயக்கம் மிகுவது கண்டேன். சற்று தொலைவு சென்று என்னை மீண்டும் திரும்பிப்பார்த்தாள். பின்பு பழையபடியே நடந்து சென்றாள். புள்ளொலி கேட்டு மருளும் மான்போல அவள் நடந்த நடையில் தயக்கம் மிகுவது கண்டேன். நான், அவள் என் கண்ணினின்று மறையும் வரை பார்த்தபடியே நின்ற இடத்திலேயே நின்றேன். அவள் முன் நின்ற இடத்தில் அவளது நிழல் என் கற்பனைக் கண்களுக்கு மட்டுமே தெரிந்தது.

அவளது மலரன்ன இதயத்தை இன்றை வாடை சற்றே துவளச் செய்தது. அவள்கொண்ட ஐயம், வாடை, புயலாக மாறிவிடுமோ என்பதுதான். வாடை வீசக் காரணம், வாடையின் கொடுமையை அவள் கண்டு, உணர்ந்து நடுக்கம் கொள்ளக் காரணம், அந்த நடுக்கத்தால் அவள் வாடை புயலாகுமோ என்று நெஞ்சிலே அஞ்சி நடந்து சென்றதற்குக் காரணம், இன்றைய நிகழ்ச்சிதான்.

* * * *

வழக்கம்போல் நான் இன்று காட்டாற்றைக் கடந்து சந்தனமரக் காட்டிற்குப் போனேன். நம் நாட்டிலேயே இன்னும் முன்னேற்றத்திற்கு வரவேண்டிய இலாக்காவில் நான் தொழிலாற்றி வந்தேன்; நான் தொழிலாற்றி வந்தது காட்டிலாகாவில். மனத்தில் உள்ள துன்பங்களெல்லாம் நிம்மதியாக மரங்களைப்பார்த்து ஆனந்தப் படுவதிலேயே சற்று நீங்கி வந்தன. வெயிலின் கொடுமை இன்னும் அதிகமாகவில்லை. சந்தன மரத்தினின்று உதிர்ந்த பூக்கள், சந்தனமரத்துப் பசுமையான இலைகள், உதிர்ந்து கிடக்கும் சருகுகள், தாறுமாறாக அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைத்துச் சிவந்த பழங்களைத்

தாங்கிக்கொண்டிருந்த களாப் பழச் செடிகள், இவைகளெல்லாம் என் மனத்தில் துள்ளுகின்ற இனிய உணர்வுகளை அள்ளி எழுப்பிய வண்ணமிருந்தன. மெல்ல மெல்ல வெயிலின் கொடுமை அதிகமாகிக் கொண்டே வருகின்றது. சந்தனமரக் காற்று முகத்தினில் வீசும்போது தண்மையானதோருணர்வு உண்டாகின்றது. இப்பொழுதோ மரம் அசையக் கூடவில்லை. நான் அப்படியே ஒரு மரத்தின் கீழே உட்கார்ந்துகொண்டேன். உட்கார்ந்தபடியே என் 'இன்றையவரையில் நான் வாழ்ந்த நாட்களை' எண்ணினேன். இருபத்து நான்கு வயதில் எவ்வளவோ வாழ்வுத் தழும்புகள் நான் பெற்றுள்ளேன்.

வறுமையிலும், திக்கற்ற தனிமையிலும், வாழ்ந்து வந்த என்னை, என் தூர உறவினரான தாய் மாமன், அழைத்துக் கொண்டு போய் அன்புடன் வளர்க்கலானார். மாமனின் அன்பினால் நான் உலகில் அறிவாளிகளுடன் வாழ்கின்ற வாய்ப்பைப் பெற்றேன். பின்பு, என் மாமா, என்னை, இந்தக் காட்டிலாகாவில் இந்த உத்தியோகத்தில் அமர்த்தினார். நிம்மதியாகப் பொழுது போய்க் கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் தான் பொழுது போகின்றது. ஆனால் என்னுடைய வாழ்வெல்லாம் இயற்கையுடன் இயைந்ததாக அமைந்திருப்பது பற்றி நான் பெருமை கொள்ளுகின்றேன்.

மாமனின் மகள் இப்பொழுது பெரியவளாக வளர்ந்து விட்டாள். நானுந்தான் வளர்ந்து விட்டேன். எங்களிருவருடையே இருந்த அன்பும் வளர்ந்தது.

இளமையில் நானும், அவளும், சண்டை போட்டுக் கொள்வது, பேசாமலிருப்பது, இவ்வாறான எத்தனையோ விளையாட்டுக்கள்! இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் சுவையூட்டுவன.

அவளிடம் இளமை முதல் என் உள்ளத்தை அடிமையாக்கி விட்டேன். இன்று அவள் சிரிப்பொலி என் இதய வீணையின் இன்ப நாதம். அவளது இன்சொல் என்றன் உள்ளத்தினுக்குக் குழலோசை. அவள் நினைவு இல்லாத நாள் என் வாழ்வில் இல்லை. அவள் என் வாழ்வின் அன்றாட உணர்வு வெள்ளம்.

என்னிடத்துத் தன்னின்பம் காணும் தகைமையளை நான் எண்ணாத நாளும் உண்டா? நேரமும் உண்டா? மழை நாளில் கருமேகங்களுடைய அலைப்பில், அவள் கண்களின் 'குருகுரு'ப்பைக் கண்டு களிப்பேன். என் கூடாரத்தின் முன்பு கருமேகத்தினழகு கண்டு தோகை விரித்தாடும் மயிலிடத்து அன்னவள் சாயல் கண்டு மகிழ்ந்திருப்பேன். மழைநாளில் ஓடும் காட்டாற்று வெள்ளத்தின் 'சலசல'ப்பில் அவள் வளையொலி கேட்டு இன்பமடைவேன். கூவும் குயிலினங்கள் அவள் பேச்சைப் பகரும். ஆடும் மரங்களின் இலைகளுடைய ஓசையில் என் மனம் கவிதையுணர்வாலே மூழ்கித் திளைக்கும். காட்டு மல்லிகையின் சுகந்தமே இங்கே மனோரஞ்சிதம். காட்டு நாவற்பழங்களை இங்கு எனக்குத் கற்கண்டுத் திராட்சைகள். எளிமை நிறைந்த வாழ்வு

தான்; ஆனால் இன்பம் நிறைந்தது; அன்பு ததும்பியது; கவலையற்றது.

இரவில் நடுயாமத்தில் உறுமும் ஓநாய்களுடைய கடுங்குரலும், புலியின் உறுமுதல் ஒலியும், அவள் கேட்க நேர்ந்தால் எப்படி நடுங்குவாள் என்று எண்ணினேன்; என்னால் கற்பனை கூடச் செய்ய முடியவில்லை; செய்யவும் விரும்பவில்லை. நாளெல்லாம் அவள் நினைவால் பொழுது போவதை யறியேன். கதிரவன் தன் கடமையாற்றி வராமற் போனாலும் போய்விடுவான். அவள் எனக்குக் காத்தவராயன் கோவிலில் உணவு கொண்டு வந்து உச்சிவேளையில் காத்திருப்பதை மறக்கவே மாட்டாள். காத்தவராயன் கோவில் இங்கிருந்து ஆறு மைல் தொலைவு. அங்கிருந்து மாமன் வீடு மூன்றுமைல் தொலைவு தானிருக்கும்.

காத்தவராயன் கோவில் வரை மக்கள் வருவதும் போவதுமாகவே இருப்பார்கள். சுள்ளிபொறுக்கிப் போவோரும், கிழங்கு அகழ்ந்து செல்வோரும், ஆவிலை பறிப்போரும் காத்தவராயன் கோவில் வரை கூடியிருப்பார்கள். அங்கே உள்ள கோவிலின் முன் மண்டபத்தில் சரியாக உச்சி நேரத்தில் சுள்ளி பொறுக்க வருவோரைத் துணைக்கொண்டு தினமும் அவள் வந்துபோவது வழக்கம். நான் சாப்பிட்டதும் இருவருமாகக் காட்டாறு, இந்த சந்தன மரக்காடு இவைகளெல்லாம் சுற்றி விட்டு மீண்டும் அவளை அழைத்துக் கொண்டு போய்க் காத்தவராயன் கோவில் வரை விட்டு விட்டு வருவேன். சுள்ளிக் கத்தையுடன் ஊருக்குப் போகின்றவர்களுடன், அத்தை மகள் வெகு பத்திரமாகப் போய்விடுவாள்.

என் அன்றாட வாழ்வெனும் வானில் அவள் இன்ப நிலா. எங்களிருவருடைய வாழ்வும் இப்படித் தான் தினமும் கழிந்து வருகின்றன. இந்த எண்ணங்களுடன் துப்பாக்கியை இடுப்பிலிருந்து தோளின்மீது எடுத்து வைத்துக் கொண்டு, என் கூடாரத்தை நோக்கி நடந்தேன்.

கூடாரத்திற்குச் சென்றதும் துப்பாக்கியை வைத்துவிட்டுக் கட்டிலில் சிறிது நேரம் படுத்தேன். என் கண்முன் அவள் வரைந்த படமிருந்தது. சித்திரம் வரைவதில் அவளுக்கிருந்த திறமை இது மட்டுமா? அவளும் நானும் வழக்கமாகக் காட்டாற்றுக் கற்பாறை மீது உட்கார்ந்து பேசும் காட்சியையும் அவள் அப்படியே வரைந்திருந்தாள். அந்தப் படம் கூடாரத்தின் ஒரு மூலையிலிருந்த மேஜைமேல். இருந்தது. மேஜைமேல் ஓய்வு நேரத்தில் பார்ப்பதற்கென்று அவள் வரைந்த படங்கள் நிறைந்த புத்தகமும், படிப்பதற்கென்று வள்ளுவரும், இளங்கோவடிகளும், ஷேக்ஸ்பியர் முதலிய புத்தகங்களும் இருந்தன. அவளே இந்தக் கூடாரத்தை இவ்வளவு கலைமய மாக்கியவள். எங்களிடையே எழுத்தால் எழுதமுடியாத, சொல்லால் உணர்த்த முடியாத, கவிதைகளால் விவரிக்கவொண்ணாத காதலின் பரந்த உருவத்தின் சிறு சிறு சாயைகளாக இவைகள் தங்கள் அன்பைப் பிரதிபலிக்கின்றன. திடீரென்று ஏதோ

நினைவு வந்ததும், 'இலாக்கா'வின் விவகாரங்களைக் கவனிக்கலாயினேன். கட்டை வெட்டிக்கொண்டிருக்கும் இலாக்காவின் வேலையாளைக் கூப்பிட்டு, "அப்பா, ஆபீஸர் வரப்போகிறார். மேற்கு மூலைக்காட்டில், சந்தனமரத்துக்குக் கீழே, காட்டாற்றுக்கு எதிரில் பெரிய கூடாரமாகப் போடணும். வருகிற 'பௌர்ணமி' தினத்திற்குள் தயாராகவேண்டும்" என்று கட்டளை யிட்டுவிட்டு, அவன் கொண்டுவந்திருந்த இலாக்காவின் கடிதங்களைப் படிக்கலாயினேன். கைக்கெடிகாரத்தின் 'டிக் டிக்' என்ற ஓசை மட்டும் மிக மிக மெல்லிய குரலில் கேட்டுக்கொண்டிருந்தது. கடிதங்களைப் படித்து முடித்ததும், கூடாரத்தைப் பூட்டிக்கொண்டு, காத்தவராயன் கோயிலை நோக்கிக் கடுமையான வேகத்துடன் நடக்கலாயினேன்.

* * *

"என்ன 'சல சல' என்ற சத்தம் மரத்தில் உண்டாகிறதே" என்ற அவளுடைய குரலைக்கேட்டு ஏதோ கவனமாக இருந்த நான் திடுக்கிட்டு எழுந்தேன். பக்கத்திருந்த துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டு அவளை, "என்ன? எங்கே?" என்று கேட்டபோது அவள் கற்பாறையினின்று எழுந்து தூரத்திலிருந்த ஆலமரத்தைச் சுட்டிக்காட்டினாள். நான் விரைந்தோடினேன். என்னுடைய சட்டைகளைப் புதரில் உள்ள முட்களும், கொடிகளும் குத்தின. நான் பொருட் படுத்தாமல் மரத்தை நோக்கி ஓடினேன்.

அங்கே நான் புலியையும் காணவில்லை; குரங்கையும் காணவில்லை. ஆறறிவு படைத்த உயிரையே கண்டேன். மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருந்தது. கழுத்தை யிறுக்கியிருந்த கயிற்றை நீக்கி அவ்வுயிரை மரணத்தின் கொடிய பிடியிலிருந்து விடுவித்தேன். இதற்குள் அவளும் இங்கே வந்துவிட்டாள்.

வாழ்வைத் துறந்து சாகத் துணிந்த அவ்வுயிர் பெண்வடிவம். அவள் வந்ததும், "ஐயோ பாவம்! வீணாகத்தான் உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்தாளே! என்ன தொல்லையோ? உயிருரிக்கிறதா?" என்று இரக்கம் நிரம்பிய குரலில் பேசினாள். வேலையாளின் துணையுடன் அப்பெண்ணை கூடாரத்திற்கு எடுத்து வந்தேன். அப் பெண்ணின் மெல்லிய விம்மல்கள் மூலமாக உயிரிருப்பதை நான் உணர்ந்தேன். இதுதான் இன்றைய நிகழ்ச்சி.

* * * *

பிரியும் நேரம் வந்தபோது தான் 'அவள்' பெண்மனம் சஞ்சலத்தினிலாழ்ந்தது. நான் மெழுகென்று அவள் எண்ணுகிறாள்; ஆனால் நான் வெம்மை நிறைந்த கன்ல் என்பதை ஏனோ அவள் அறியவில்லை? அவளுக்கு என் உள்ளத்தில் நான் அளித்திருந்த இடம் என்றும் நிரம்பி யிருக்கும். வேறு ஒருவரையும் புகவிடமாட்டேன். என்ன விருந்த போதினும் 'பெண்' தனக்குரியவன் வேறு பெண்ணுடன் இருப்பதை—

நடுநிசியில் அப்பெண் கண் விழித்தாள். கூடாரத்திலிருந்த

அரசாங்க ' விளக்கின் சிறிய ஒளியில், அவள் கண்கள் மெல்ல மெல்ல மலர்வது கண்டேன். விளக்கின் ஒளியை உயர்த்தினேன்; அவள் கண் விழித்த வண்ணம், "நான் எங்கிருக்கின்றேன்?" என்று கேட்டாள். நான் அவள் முகத்தில் தண்ணீர் தெளித்த வண்ணம், "இங்குதானிருக்கிறீர்கள். அஞ்ச வேண்டாம்" என்று மெல்லிய குரலில் கூறினேன். நான் பாதி சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவள் தன்னுடைய சுய நினைவை இழந்து விட்டாள். அவளிமைகள் அவளையறியாது மூடிக்கொண்டன. நான் இருளில் அமர்ந்த வண்ணம் வெளியே குடி கொண்டிருந்த பேரமைதியில் ஈடுபட்டேன். என் கண் முன் எல்லையற்ற பேரமைதி குடி கொண்டிருந்தது. மரங்களும், கொடிகளும், பறவைக் கூட்டங்களும் அமைதியாக இருந்தன. இந்த அமைதியைக் குலைக்க விரும்பாததாலோ, என்னவோ, காட்டாற்றில் தண்ணீரின் சலசலப்பும் இல்லை. நான் இவ்வாறு எண்ணமிட்டவனாய் அமர்ந்தபோது மீண்டும் அந்தப் பெண்ணின் குரல் கேட்டேன். "அமுதம்! அமுதம்! என் வாழ்வுக்கு நீயொரு அமுதம் என்று கொஞ்சினனே! 'விதவைக்கும் வாழ்வுண்டு' என்று பசப்பினனே! இவ்வளவுதானா அவன்?" என்பவையே அக்குரல் மொழிந்தவை. இந்த ஊறலில் அவள் வாழ்வு பதிந்திருப்பது கண்டேன். "பாவம்! விதவை" என்று என் மனம் வாய்விட்டுக் கூறவும் செய்தது. அவள், "நீங்கள் யார்?" என்று நினைவு வந்து கேட்டாள். நான், 'சாவப் போன உங்களைக் காப்பாற்றினேன்" என்றேன். அவள், "எனக்குச் சாவதற்கும் உரிமையில்லையா? விதவைக்குச் சாவும் வழி விடாதா?" என்று கேட்டாள்; மீண்டும் நினைவிழந்தாள்.

நான் குளிர்ந்த தண்ணீரை அவள் முகத்தில் தெளித்து விட்டுத் தரையில் படுத்தேன். உறக்க உலகிலாழ்ந்தேன். கண்விழித்துக் கட்டிலை நோக்கினேன்; காலைக் கதிரவனின் ஒளிக் கற்றைகள் மெல்ல மெல்ல வெளிவருவது கண்டேன்; ஆனால் கட்டிலில் அமுதத்தைக் காணவில்லை. என் மனத்தில் தடுமாற்றம் சற்றே உண்டாயிற்று.

(அடுத்த இதழில் முடிவுறும்.)

[47-ம் பக்கத் தொடர்ச்சி]

—நமது நாட்டுக்குச் சொந்தமான சுதந்திர சர்க்கார் ஏற்பட்டு, அந்த சர்க்காரின் விவசாய இலாகாவினால் விவசாயிகளுக்கு வேண்டிய சகல உதவிகளும் அளிக்கப் படுகின்ற காலம் எதுவோ!—நமது இளைஞர்களின் எதிர்கால வாழ்வு சோபிதம் அடைகின்ற மார்க்கத்தில் கல்விப் பயிற்சி அளிக்கப்படுகின்ற காலம் எதுவோ, அந்தக் காலம் என் ஜீவியதசையிலேயே அடங்கியதாயிருக்கவேண்டும்! அவைகளையெல்லாம் நான் கண்குளிரக் காண வேண்டும்! அவற்றை நான் பார்த்து மகிழ்வதன் மூலமே எனது மகிழ்ச்சி மேலும் மேலும் உயரும்! அந்தக் காலந்தான் எனது சந்துஷ்டியின் உச்சத்துக்குரிய காலம்.

குற்றச்சாட்டு!

வி. து. சச்சிதானந்தன்

நீதிபதி : உன்னுடைய இருபத்தைந்தாவது வயதில் பன்னிரண்டு வயதுள்ள ஒரு பெண்ணை நீ மணந்தாயா ?

குற்றவாளி : மணந்தேன். அந்தத் திருமணம் என்னுடைய பெற்றோரால் கட்டாயப் படுத்திச் செய்யப் பட்டது.

நீ : உன் வயதுக் கேற்ற பெண்ணை மணக்காமல் பருவமடையாத ஒரு பெண்ணை மணந்ததாக 'சாரதா சட்ட'ப்படி உன்மீது குற்றம் பதிவு செய்யப்படுகிறது.

கு : என்னுடைய பெற்றோர் செய்த குற்றத்திற்காக நானு தண்டனையை அனுபவிக்க வேண்டும் !

நீ : ஆம்; உனக்குப் பகுத்து அறியும் பருவம் வந்த பிறகே நீ அவ்வாறு மணந்திருக்கிறாய். உன் பெற்றோர் கட்டாயப் படுத்தி யிருந்தாலும் நீ மறுத்திருக்க வேண்டும். உன் பெற்றோர் செய்த குற்றத்திற்கு நீ உடைந்தாயாக இருந்தாய் என்பதே குற்றச்சாட்டு.......... உனக்கு மேல் ஆறு வயது பெரியவள் ஒருத்தியை இரண்டாவது முறையாக மணந்தது உண்மையா ?

கு : உண்மைதான்.

நீ : ஒரு ஆண், தன்னைவிட குறைந்த வயதுள்ள பெண்ணைத் தான் மணக்க வேண்டும். ஆனால், நீயோ இந்து தருமத்திற்கு மாறாக வயதில் உன்னிலும் பெரியவள் ஒருத்தியை மணந்து கொண்டாய். ஆகையால், இந்து தருமத்திற்கு இழுக்கு உண்டாக்கியதாக உன்மீது இரண்டாவது குற்றம் சாட்டப் படுகிறது.

கு : ஐயா, என்னைவிட வயதில் குறைந்தவள் ஒருத்தியை நான் மணந்து கொண்டால், வயதில் பெரியவனான நான் முதலில் இறப்பேன். எனக்குப் பின் என் மனைவி இறப்பாள். நான் இறப்பது முதல் அவள் இறக்கும் வரை விதவையாகக் கஷ்டப்பட வேண்டி யிருக்கும். என்னைவிட வயதில் அதிகமானவளைக் கலியாணம் செய்து கொண்டால், அவள் எனக்கு முன் சுமங்கலியாகவே இறப்பாள். என் மனைவியை விதவை யென்று கேலி செய்ய யாருக்கும் இடமிருக்காது. இம்மாதிரியே எல்லோரும் கலியாணம் செய்து கொண்டால் நாட்டில் விதவைகள் எண்ணிக்கை குறையும். ஆகையால்..........

நீ : முதல் மனைவி உயிரோடிருக்கும் போது இரண்டாவது முறையாகக் கலியாணம் செய்து கொண்டிருக்கிறாய். சென்ற ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 'இருதார விவாகத் தடைச் சட்டம்' இதை அனுமதிக்க வில்லை. எனவே அச்சட்டத்தை மீறியதாக உன்மீது குற்றம் சாட்டப்படுகிறது.

கு : நான் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னமேயே அவளை மணந்து கொண்டேனே. முதல் மனைவிக்குக்

குழந்தை பிறக்காமல் இருந்ததால் தான் இரண்டாவது முறை மணம் செய்து கொண்டேன்.

நீ : 'முதல் மனைவிக்குக் குழந்தை பிறக்காவிடில் இரண்டாவது மணம் செய்து கொள்ளலாம்' என்றவிதி சட்டத்தில் காணப்படவில்லை.

கு : சட்டம் செய்தவர்கள் அந்த விதியைச் சேர்க்க மறந்திருக்கலாம். நீங்கள் அதைச் சேர்த்து விட்டால்.......

நீ : அது சட்ட சபையின் வேலை.

கு : சட்டசபை அங்கத்தினர்கள் சபையில் குறட்டை விடாமல், தூங்குவதாகப் பத்திரிகைகளில் படித்தேன்.

நீ : இப்பொழுது நீ சட்டசபை அங்கத்தினர்களை அவதூருகப் பேசியதாக உன்மீது குற்றம் பதிவு செய்யப்படுகிறது.

கு : ஐயா, ஏதோ சட்டம் என்று சொன்னீரே, அது அமுலுக்கு வரும் முன்பே நான் இரண்டாவது முறை கலியாணம் செய்து கொண்டதால், என்மீது அச்சட்டப்படி குற்றம் சாட்டுவது முறையல்ல.

நீ : இரண்டாவது மனைவிக்கும் குழந்தை பிறக்கவில்லை என்றால் மூன்றுவது முறை மணம் செய்து கொள்வாயா ?

கு : இனிமேல் நான் கலியாணம் செய்துகொள்ள மாட்டேன். எனக்கு இப்பொழுது பன்னிரண்டு குழந்தைகள் இருக்கின்றன.

நீ : (என்ன ! இரண்டாவது கலியாணம் ஆகி ஐந்து வருஷங்கள் ஆகிறதென்கிறாய். அதற்குள் பன்னிரண்டு குழந்தைகளா ! பன்னிரண்டா !

கு : ஐயோ, அப்படிச் சொல்லாதீங்கோ. குழந்தைகளுக்குக் கண்ணேறு பட்டுவிடும். (மனைவிகளைப் பார்த்து) அடீ தங்கம், அலமு ! வீட்டுக்குப் போனதும் குழந்தைகளுக்குப் படிகாரம் சுற்றிப் போடுங்கடீ. (நீதிபதியைப் பார்த்து) ஐயா, நீங்க என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லுங்க. என் குழந்தைகளை மட்டும் கணக்கிட்டு எதுவும் சொல்லாதீங்க. குழந்தைகளுக்கு உடம்புக்கு ஏதாவது வந்து விடப்போகுது........

நீ : நீ சொல்வதை நம்ப முடியவில்லை. ஐந்து ஆண்டுகளில் உனக்கு எப்படிப் பன்னிரண்டு குழந்தைகள் பிறந்தன !

கு : ஆமாங்க. என் இரண்டாவது மனைவி ஆண்டுக்கு ஒரு முறையாக ஐந்து வருஷங்களில் ஐந்து முறை பிரசவித்தாள். இரண்டு பிரசவங்கள் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. மொத்தம் அவள் ஏழு குழந்தைகளைப் பெற்றாள். இரண்டாம் முறை கலியாணம் செய்து கொண்ட பின் முதல் மனைவிக்கும் குழந்தைகள் பிறக்க ஆரம்பித்தன. அவள் இதுவரை ஐந்து குழந்தைகளைப் பெற்றாள். இப்பொழுது அவள் கருப்பமாயிருக்கிறாள். இதுவரையில் பிறந்திருக்கிற குழந்தைகள் பன்னிரண்டு, பிறக்கப் போவது ஒன்று ஆக எனக்கு மொத்தம் பதின்மூன்று குழந்தைகள் என்று வைத்துக் கொள்ளலாம்.

நீ : (பெருமூச்சு விட்டு) நாட்டிலே மக்கள் எண்ணிக்கை அதிகமாகி வருவதைத் தடுக்க அரசாங்கம் கருப்பத் 'தடைப் பிரசாரம் செய்து' வருவதைக் கொஞ்சமும்

மதிக்காமல் யாரும் எண்ணிப்பார்க்கக் கூட முடியாத வகையில் நீ மக்கள் தொகையை அதிகமாக்கியிருக்கிறாய். ஏற்கனவே, இங்கு சுமார் ஐந்து கோடி மக்கள் உணவும் உடையும் போதிய அளவு கிடைக்காமல் அல்லல் படுகின்றனர். உற்பத்தியின் அளவைக் காட்டிலும் தேவையின் அளவு அதிகமாயிருப்பதால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பங்கு தேவைக்கும் குறைவாகவே இருக்கிறது. நீயோ அபரிமிதமாக மக்கள் தொகையைப் பெருக்கி விட்டதால் சாதாரணமாக ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பங்கின் அளவு மேலும் குறைந்து விடுகிறது. தேவைக்கு வேண்டிய அளவு உணவும் உடையும் பிறவும் கிடைக்காதலால் மக்கள் கவலையுற்று சவலைகளாகக் கிடக்கின்றனர்.... (சற்றுக் கோபத்துடன்) வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களின் உற்பத்தி குறைவாக இருக்கும் போது மக்கள் உற்பத்தியை அதிகப் படுத்தி, நாட்டில் பொருளாதார நெருக்கடியை வளர்த்த குற்றத்திற்காளாகிறாய்.......

கு : ஐயோ, விதியே....குசேலருக்கு இருபத்தேழு குழந்தைகள் இருந்தவராம். அவர்மீது இம்மாதிரி குற்றம் சாட்டப்பட்டதாகத் தெரியவில்லையே, எனக்குமட்டும்....

நீ : உஸ்...இங்கே கூச்சல் போடக்கூடாது. உன்மீது மொத்தம் நான்கு குற்றங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. முதலாவது குற்றம் சாரதா சட்டத்தை மீறித் திருமணம் செய்து கொண்டது. இதற்கு தண்டனை ஐம்பது ரூபாய் அபராதம். இரண்டாவது, வயதில் முதியவளை மணந்து இந்து தருமத்திற்கு இழுக்கு உண்டாக்கியதாகக் குற்றச்சாட்டு. இதற்குத் தண்டனை ஐம்பது ரூபாய் அபராதம். 'இருதார விவாகத் தடைச் சட்டம்' கொண்டு வரப்பட்டதற்கு முன்பே இரண்டாவது தாரம் கலியாணம் செய்து கொண்டதால் நீ மன்னிக்கப் படுகிறாய். மூன்றாவதாக, சட்டசபை அங்கத்தினர்களை அவதூறாகப் பேசிய குற்றம். இதற்குத் தண்டனை நூறு ரூபாய் அபராதம். நான்காவது, மக்கள் தொகையை அதிகமாக்கி நாட்டில் பொருளாதார நெருக்கடியைப் பெருகச் செய்த பெருங் குற்றம். இக்குற்றத்திற்கு 200 ரூபாய் அபராதம். 3 மாதம் கடுங்காவல் தண்டனை. ஆக 4 குற்றங்களுக்கும் 3 மாத கடுங்காவல் தண்டனையும், 400 ரூபாய் அபராதமும், கட்டத் தவறினால் 5 ஆண்டு கடுங்காவல் தண்டனையுமாக விதிக்கப்படுகிறது.

கு : ஐயோ, என் மாதச் சம்பளமே நாற்பத்தியேழு ரூபாய் தானே, பஞ்சப்படி உள்ளபட. என்றால் எப்படி இவ்வளவு பெரிய தொகையைச் செலுத்த முடியும்.

நீ : அபராதம் செலுத்தா விட்டால் உன்னுடைய சொத்து பறிமுதல் செய்யப்படும்.

கு : ஐயா, எனக்குப் பரம்பரை சொத்து கூட கிடையாதே. குடும்ப செலவுக்கே போதாமல் இதுவரை ரூபா 700க்குமேல் கடன் வாங்கி....

நீ : இல்லையானால் சிறைக்குப் போக வேண்டியதுதான்.

கு : என் குழந்தைகள் ....

நீ : தீர்ப்பு கூறப்பட்டு விட்டது. இனி மன்றம் கலையலாம்.

சிறுவவர் பகுதி

தேவதையின் மகன்

" அண்ணன் "

ஓர் ஊரில் ஒரு பையன் இருந்தான். அவன் பெயர் முருகன். அவன் தினந்தோறும் மாடு மேய்த்துக்கொண்டு வருவது வழக்கம். அவன் மிகவும் நல்லவன். முருகன் மத்தியானங்களில் மாடுகளை அவிழ்த்து விட்டு இவன் மற்றப் பையன்களோடு விளையாடிக்கொண்டிருப்பான். இவன் மிக அழகாக இருப்பான்.

ஒரு நாள் அந்தக் காட்டில் வாழும் வனதேவதை முருகனைக் கண்டாள். இவனைத் தன் குமாரனாக வளர்க்க வேண்டும் என விரும்பினாள்.

" தம்பி! உன் பெயர் என்ன ?" என்றாள்.

" என் பெயர் முருகன். "

" நான் உன்னை வளர்க்க விரும்புகிறேன். என்னோடு வருகிறாயா ?

"நான் எப்படி வர முடியும்? நான் மாடு மேய்க்கும் சிறுவன். தாங்கள் யாரோ பெரிய பணக்காரரைப் போலக் காணப்படுகிறீர்கள். "

" பரவாயில்லை. நான் இந்தக் காட்டில் இருக்கும் வன தேவதை. நான் தான் இந்தக் காட்டுக்குப் பெரிய அரசி. நீ என்னுடன் இருந்துவிடு. "

" சரி " என்று ஒப்புக்கொண்டு அத் தேவதையின் வீட்டுக்குப் போனான். அவனை அவள் மிகச் செல்வமாக வளர்த்தாள். கல்வி கற்பித்தாள். பல வித்தைகளைக் கற்றுக் கொடுத்தாள்.

இவனிடம் காட்டிலே வாழ்ந்த மிருகங்கள் மிக அன்பாகப் பழகின. அந்த மிருகங்கள் எல்லாம் இவன் சொற்படி நடக்கும். சிங்கம், புலி, கரடி, யானை முதலிய மிருகங்களுக்கெல்லாம் இவன் பெரிய அரசனாக விளங்கினான். இவன் அவை கத்துவது போலக் கத்துவான். அவை எங்கிருந்தாலும் இவனிடம் வந்துவிடும்.

இவன் சுமார் பத்து ஆண்டுகள் அங்கே வாழ்ந்து வந்தான். வயது இருபது ஆயிற்று. ஒரு நாள் தன் தாயாகிய 'வன தேவதை'யைப் பார்த்து,

" அம்மா! நான் ஊருக்குப் போக விரும்புகிறேன் " என்றான்.

" நீ போகலாம். ஆனால் உனக்குக் கலியாணம் செய்து பிறகு அனுப்பலாம் என்று பார்க்கிறேன்" என்றாள்.

" ஆம் அம்மா. இந்தக் காட்டிலேயேவாழ்ந்தால் உங்கள் விருப்பம் நிறைவேறுமா?" என்று கேட்டான்.

சரி, ஊருக்குப் போ. அங்கே பட்டணத்து அரச மகளைக் கலியாணம் பண்ணிக்கொள்ள வேண்டும். அப்படிப் பண்ணிக்கொள்வதானல் நீ ஊருக்குப் போகலாம் என்றாள்.

" அது எப்படி முடியும் ?"

" நீ முயற்சி செய். வெற்றி கிடைக்கும். வேண்டிய உதவி செய்கிறேன். போய் வா. நீ ஒரு பெரிய அரசனாக ஆவாய் " என்று ஆசீர்வாதம் செய்து அனுப்பினாள்.

நல்ல நாள் பார்த்துப் புறப்பட்டான். காட்டில் உள்ள மிருகங்களெல்லாம் வழி விட்டன. இவனிடத்தில் மிக நட்பாக இருந்த குரங்கு மட்டும் பிரியமாட்டேன் என்று சொல்லி அழுதது. அதை மட்டும் அழைத்துக் கொண்டான். தன் தாயிடம் விடை பெற்றுக் கொண்டான்.

ஊருக்குள்ளே புகுந்தான். பிறகு பல கிராமங்களைக் கடந்து பட்டணத்துக்குள் சென்றான். அங்கே பல வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டே போனான். இவன் குரங்கோடு செல்லுகின்ற காட்சியைப் பல பேர் வேடிக்கை பார்த்தார்கள். இவன் ஒரு கடைக்குப் போய் குரங்குக்கு வேண்டிய உடைகளை வாங்கி அதற்குத் தைத்துப் போட்டான்.

குரங்கோடு இவனும் நடக்கின்ற காட்சியைக் கண்டு ஊராரெல்லாம் இவனைச் சுற்றிக் கொண்டார்கள்.

" நீ யார் ? உனக்கு வேடிக்கை ஏதேனும் செய்யத் தெரியுமா ? என்று கேட்டார்கள்.

" தெரியும் " என்றான்.

" அப்படியானால் எங்கள் அரசரிடம் வா. அவர் வேண்டிய வெகுமதி கொடுப்பார் " என்று கூறினார்கள்.

இவனும் அவர்களுடன் போனான்.

அரச சபையில் பல வேடிக்கைகளைக் குரங்கைக் கொண்டு நடத்திக் காட்டினான். அதுமட்டும் அல்லாமல் வனதேவதையின் அருளால் பல மாய வித்தைகளை எல்லாம் காட்டினான். அரசன் ஆச்சரியப்பட்டான். அரசனின் மகளும் மேல் மாடத்திலிருந்து இவ் வேடிக்கைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளும் ஆச்சரியப்பட்டாள்.

" உனக்கு என்ன பரிசு வேண்டும் ? என்று கேட்டான்.

" எது கேட்டாலும் கொடுக்க முடியுமா ? "

" ஓ கொடுக்கிறேன். அரசனால் கொடுக்க முடியாதது ஒன்றும் இல்லை. நான் கூட இல்லை என்று கூறுவேனா ? கட்டாயம் கொடுக்கிறேன் "

" அப்படியானால் சரி. நான் தங்கள் மகளைக் கலியாணம் செய்து கொள்ள விரும்புகிறேன். தங்கள் மகளைக் கொடுக்கவேண்டும் " என்று கேட்டான்.

அரசனுக்குக் கோபம் வந்து விட்டது. அவனை அப்படியே வாளால் வெட்டி விடலாம் என்று எண்ணினான். ஆனால் தான் சொன்ன சொற்களைக் காப்பாற்ற வேண்டுமே என்று கவலைப் பட்டான். ஒரு தந்திரம் செய்தான் அரசன்.

முருகனைப் பார்த்து, " நீ ஒன்று செய்ய வேண்டும். அது செய்தால் கட்டாயம் தருகிறேன் " என்று அரசன் கூறினான்.

" எது வேண்டுமானாலும் செய்கிறேன் " என்றான். அரசன்

யோசித்துப் பார்த்தான். இவனைச் செய்ய முடியாத காரியத்தைச் சொல்லி இவனை ஏமாற்றி விட வேண்டும் என எண்ணினான்.

"காட்டிலே இருக்கின்ற சிங்கம் ஒன்றைக் கட்டிப் பிடித்து அதில் சவாரி செய்து கொண்டு இரண்டு நாளைக்குள் வந்து சேர வேண்டும். வந்தால் அப்படியே தருகிறேன். தடை இல்லை" என்றான்.

"சரி" என்று ஒப்புக் கொண்டான்.

அரசன் தொல்லை விட்டது என மகிழ்ந்தான். அரச சபை கலைந்து விட்டது.

அன்று இரவே தன்னுடைய நண்பனாகிய குரங்கினிடம், "நீ காட்டுக்குப்போய் அங்கே சிங்க ராசனிடம் நான் அழைத்துக் கொண்டு வரச் சொன்னதாகச் சொல்லி நாளை இரவு அழைத்துக் கொண்டு வா" என்று கூறி அந்தக் குரங்கை அனுப்பினான்.

சிங்கராசனும் மறுநாள் இரவு குரங்கோடு இவன் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தது. பொழுது விடிந்ததும் சிங்கத்தின்மீது இவனும் குரங்குடன் ஏறிக் கொண்டு அரசன் சபைக்குச் சென்றான். கண்டவர்கள் எல்லாம் அச்சம் கொண்டு ஓட ஆரம்பித்தனர். அரசனிடம் முறையிட்டனர்.

அரசனும் இச் சிங்கத்தையும் இவனையும் பார்த்து ஓடத் தொடங்கினான்.

முருகன் அரசனைப் பார்த்து, அரசே ஓடவேண்டாம். நான் இருக்கும் வரையில் இது ஒன்றும் செய்யாது என்று கூறிச் சிங்கத்தை விட்டு இறங்கி அரசனிடம் சென்றான்.

அரசன் இவனைப் பார்த்து, "முதலில் அந்த சிங்கத்தைக் காட்டுக்கு அனுப்பிவிடு. நாளைக்கே கலியாணத்துக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்றான்.

அப்படியே சிங்கத்தை அன்று இரவு அனுப்பிவிட்டான். தன் தாயை நாளைக் கலியாணத்திற்குக் கட்டாயம் வரும்படிக் கடிதம் எழுதி அதன் கழுத்தில் கட்டி அனுப்பினான்.

மறுநாள் கலியாணம் நடந்தது. வனதேவதையும் கலியாணத்திற்கு வந்தாள். இவள் மற்றவர் கண்களுக்குப் புலப்படாமல் இவன் கண்களுக்கு மட்டும் காணப்பட்டாள்.

கலியாணம் சிறப்பாக நடந்தது. அரசனுக்கு வயதாகி விட்டதால் இவனுக்குப் பட்டம் கட்டி இவனை அரசனாக்கிவிட்டார். இவனும் அரசனான். மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து நன்றாக அரசு புரிந்தான். முருகனும் அரசனான். கதையும் முடிந்தது.

நாட்டை உருவாக்கும் பணி!

(தோழர் ஜீ. டி. நாயுடு அவர்கள் உரைத்தொகுப்பு)

சர்க்காரின் உணவுக்கொள்கை

உணவுக் கட்டுப்பாடு, விவசாயம் சம்பந்தமாக பல பத்திரிகைகளை நான் படித்திருக்கிறேன். வெளி நாடுகளிலிருந்து, ஏராளமான உணவு தானியங்களை இறக்குமதி செய்ததன் மூலம் கோடி கோடியாக நஷ்டம் அடைந்ததற்குப் பதிலாய், சர்க்காரே அந்தப் பெருந் தொகையை விவசாயிகளுக்குக் கொடுத்து உதவி செய்து, உணவுப் பொருள் உற்பத்தியை அபிவிருத்தி செய்யும்படி ஊக்கமூட்டியிருந்தால், நமது மாகாணத்தின் உணவுக் கஷ்டம், நமக்குத் தேவைப்பட்ட அளவுக் கேனும் திருப்திகரமான நிலைமையை அடைந்திருக்கும் என்றும் அதைப் போலவும் கூறப்பட்டிருந்த சில அபிப்பிராயங்களையும் வாசித்திருக்கிறேன்.

பஞ்சத்தைத் தவிர்ப்பதற்காக, சர்க்கார் ஓர் உத்திரவைப் பிறப்பித்திருக்க வேண்டும். விவசாய நிலங்கள் எல்லாவற்றிலும், ஒரு வருஷம் வரை, உணவு தானியங்களைத் தவிர வேறு எதுவும் பயிரிடக் கூடாதென்று, விவசாயிகளில் ஒருவர் கூட பாக்கியின்றிச் சகலரையும் தாக்கீது செய்திருக்க வேண்டும். அதேசமயத்தில் உணவு தானியங்களின் மீது விதிக்கப்பட்ட விலைக் கட்டுமானத்தை ரத்து செய்திருக்க வேண்டும். இப்படிச் செய்திருந்தால், உணவுப் பண்டங்களின் பங்கீட்டினாலும் அவற்றின் விலை கட்டுப்பாட்டினாலும், அந்த கட்டுப்பாட்டை ரத்து செய்ததினாலும் ஜனங்கள் பீதி அடைவதற்கே இடமேற்பட்டிருக்காது. இனியும் எல்லா விவசாய நிலங்களிலும், உணவு தானியங்களை மட்டுமே பயிர் செய்தாக வேண்டுமென்ற உத்திரவு பிறக்காமல், உணவு தானியங்களின் விலை கட்டுப்பாட்டை மட்டும் ரத்து செய்யும் உத்திரவு அமலுக்கு வருமானால், உணவுப் பொருள் விநியோக விஷயத்தில் நாடெங்கும் அல்லோல கல்லோலம் ஏற்படப் போவதை நாம் நிச்சயமாய்க் காணலாம்.

விவசாய இலாகா நிலைமை

இவ்விதக் காரியங்களைக் கருதி விவசாய இலாகாவை அடியோடு மாற்றி, மக்களுக்கு ஏற்றவிதமாய்த் திருத்தி அமைக்கவேண்டும். தற்போதுள்ள இலாகா, விவசாய அபிவிருத்தியில் சில அபூர்வ மார்க்கங்களைச் சாதித்திருந்தாலும் இந்தப் பஞ்சகாலத்தில் அதனால் எந்தவிதமான உதவியும் ஏற்படவில்லை. இன்றையதினம் இங்கே நம்மிடையே உட்கார்ந்திருக்கிறாரே, பி. ஜி. கருத்திருமக் கவுண்டர் என்னும் கனவான். அவர் தமது பூமியில், இதற்கு முன் அறுவடை செய்ததைக் காட்டிலும், மற்ற விவசாயிகள் அடைந்த கண்டு

முதலைக் காட்டிலும் மும்மடங்கு அதிகமாய் இப்போது அறுவடை செய்திருக்கிறார்.

பழங்கள், தானிய வகைகள், பருத்தி ஆகியவற்றைப் பொறுத்து நான் ஆராய்ச்சிகள் சில செய்திருக்கிறேன். அவைகளைப்பற்றி அக்கரையோடு ஆராய்ச்சி செய்யவேண்டியது விவசாய இலாகாவின் கடமையாக விருந்தும், இதுவரை அவர்கள் அப்படி ஓர் ஆராய்ச்சி தேவைதானா என்று எவ்விதமான முடிவுக்ும் வந்ததாகக் காணோம். இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அந்த இலாகாவில்கூட விஞ்ஞான அறிவு படைத்த மனிதர்கள் இல்லாததே அதன் காரணம். மேலும் திறமைக்கு லாயக்கற்றவர்களே அங்கு அதிகமாய் இருக்கின்றார்கள்.

மாகாண சுதந்திரம் எதற்கு?

துரதிஷ்ட வசமாய், இந்த மாகாண சர்க்காருக்கு வெகு தூரத்தில் மத்திய சர்க்கார் இருந்து வருகிறது என்பதல்லாமல், ஒத்துழைப்பிலும் மத்திய சர்க்கார் நம் மாகாண சர்க்காருக்கு எட்டவேதான் இருந்து வருகின்றது. நெல் அல்லது அரிசி வகைகளில், மூட்டைக்கு ஒருரூபாய் கூட்டியோ குறைத்தோ விலை நிர்ணயிப்பதானாலும் மத்திய சர்க்கார் அனுமதியின்றி நம் மாகாண சர்க்கார் ஒன்றும் செய்ய முடியாது. இந்த ஸ்திதியிலிருக்கும் நம் சர்க்கார் எதைத்தான் சாதிக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆகையினாலே நான் சொல்லுகிறேன். நமக்குச் சொந்தமான தனிச் சர்க்கார்' ஏற்படுத்துவதற்கு முன் எது ஒன்றையும் நாம் உருப்படியாகச் செய்து கொள்ள முடியாது.

இதுவரை நான் தெரிவித்து வந்த சில குறிப்புகளைப்பற்றி ஒரு முடிவுக்கு வருமுன், முதலில் அவர்களுடைய சுதந்திரத்தைப் பற்றித் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். மத்திய சர்க்காரின் ஆதிக்கத்திலிருந்து அவர்கள் விடுதலை பெறாமல், உபயோகமான எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது. சுதந்திரத்தை மத்திய சர்க்காரிடமிருந்து விலை கொடுத்தேனும் வாங்கியாக வேண்டும். அல்லது அவர்களின் பிடிப்பை உடைத்தாவது விலகியாக வேண்டும். அதற்குமேல் நமது மக்களின் வளர்ச்சிக்கான தேவைகளைச் செய்து கொள்ளலாம்.

தற்கால கல்வியும் வீண் செலவும்

கல்வியைப்பற்றி, நான் அதிகமாய்ச் சொல்வதற்கில்லை. காரணம், நானே பள்ளிக்கூடங்களில் படித்ததில்லை.

பள்ளி ஆசிரியர்கள் தங்களுக்குள்ள குறைபாடுகளை முறையிட்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று மந்திரிகள் விரும்பினாலும், இவர்களிடம் அதற்குப் பணம் இல்லை. ஒரு பக்கம் நமது சர்க்காரால், புழுதியாகவும் புகையாகவும், பணம் வீணாக்கப்பட்டு வருகின்றது. மற்றொரு பக்கத்திலே, உபாத்தியாயர்களின் ஊதியத்தை உயர்த்தவோ, குறைவாகக் கொடுக்கப்படும் சிப்பந்திகளின் சம்பளத்தைக் கூட்டவோ பணமில்லை. இல்லை அப்படியிருந்தாலும், தற்

காலக் கல்வி முறைக்குக் கட்டிடங்கள் கட்டுவதிலும் போதனைக்கு வேண்டிய பொருள்கள் வாங்குவதிலும் ஏராளமான பணத்தைச் சர்க்கார் வீணாக்குவதில் மட்டும் குறைச்சலில்லை. இப்படித் தகுதியும் பொருத்தமில்லாத கல்வி முறைக்குப் பெரும் பொருள் விரயம் செய்யப்படுவதல்லாமல், ஆசிரியர்களின் காலமும் மாணவர்களின் இளமையும் வீணாகிக் கொண்டும் போகிறது.

சுருள் படங்களில் கல்வி

ஒருவர் 280 மணி நேரத்தில் எதைப்படிப்பிக்கலாமோ, அதை 20 மணி நேரத்தில் சினிமா சுருள் போதனையின் மூலம் படிப்பிக்க முடியும். அந்த முறையை நான் கவுரவ டயரக்டராக இருந்துவரும் ஆர்தர்ஹோப் பாலிடெக்னிக்கலில் கையாண்டிருக்கிறேன். மூன்று நான்கு வருஷப் படிப்பை, ஒரே வருஷத்தில், பரிக்ஷையிலும் நல்ல பலன் கிடைக்கக்கூடிய விதமாய், அளிக்க முடியும். எப்படித்தான் இருக்கட்டுமே, சர்க்காருக்கு எவ்வளவு விளக்கிச் சொன்னபோதிலும் அவர்களைத் திருப்தி செய்வதென்பது மட்டும் சாத்தியமில்லாத விஷயம்! புதிய போதனா முறைகளை அறிந்துகொள்ளும்படி சர்க்காரைச் செய்வதென்பதும் இயலாத காரியம்.

எல்லாப் பள்ளிகளிலும், சகல பாடங்களையும் சுருள்படங்களைக் கொண்டு சுலபமாய்ச் சொல்லிக் கொடுக்க முடியும். லாபகரமான முறையில், நிறைவேறச் செய்வதற்குப் படங்காட்டும் இயந்திரங்களையும் (projectors) அதற்கான சுருள் படங்களையும் (films) உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நாமே தொடங்கியாக வேண்டும்.

இந்த இயந்திரங்களும் சுருள் படங்களும் வெளி நாடுகளிலிருந்து வாங்கிக்கொள்ளலாம் என்ற கொள்கை கூடவே கூடாது. அங்கிருந்து வாங்குவதானால், கிரமமான கிரயத்துக்கு மேல் 200, 300 ப.. அதிகமாய் லாபம் கொடுக்க வே.. டியதேற்படும். இதில் தொழில் இலாகா மந்திரியும் கல்வி இலாகா மந்திரியும் ஒத்துழைத்து, கால விரயமும் பணவிரயமுமின்றி, சுருள் படங்களின் மூலம் கல்வியைப் பரப்பும் புது முறை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதில் சிரத்தையும் சிந்தையும் செலுத்த வேண்டும்.

தென்இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு வடக்கத்தியாரின் சதி வேலை

இந்தச் சந்தர்ப்பத்தில், ஒரு முக்கியமான காரியாம்சத்தைப் பொறுத்து மந்திரிகளை ஜாக்கிரதை செய்துவைக்க வேண்டுமென்பது என் விருப்பம். தென் இந்திய தொழிற்சாலை வளர்ச்சி சம்பந்தமாக இப்பொழுது காகிதக் கட்டில் இருந்துவரும் பழைய தஸ்தாவேஜிகள், பிரசுரங்கள், அறிக்கைகள், சிபாரிசுகள்,—ஏதேனும் கமிட்டியோ அல்லது உத்தியோகஸ்தரோ செய்த—தீர்மானங்கள் முதலியவற்றில் எதையும் ஆதாரமாக வைத்து யோசிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். செய்ய விரும்பும் காரியாதிகளுக்கு அவற்றைஅவர்கள் மூலாதாரமாகக் கொள்வார்களானால் நிச்சயமாகச்

சொல்கிறேன், தவறான பாதையில் செலுத்தப்பட்டு விடுவார்கள்; அதற்கப்புறம் எந்தத் தொழிற்சாலையும் தொடங்க முடியாது; வளர்ச்சிக்குரிய வேறெந்த மார்க்கத்திலும் பிரவேசிக்க இயலாது. ஏனென்றால், அந்தக் கட்டுகளிலுள்ள பழைய அறிக்கைகள், தஸ்தாவேஜிகள் சகலமும் வடக்கேயுள்ள மனுஷர்களால் தயாரிக்கப்பட்டவை; அந்த வடக்கத்தியார் விஷயத்தில் அக்கறை கொண்ட, அல்லது அவர்களால் வசிகரிக்கப்பட்ட மனிதர்களால் சிருஷ்டிக்கப்பட்டவை. தென் இந்தியாவுக்கு விரோதமாக வடக்கத்தியாரின் சாதுர்யமான தந்திரோபாயங்களெல்லாம் அவைகளில் நிரம்பிக் கிடக்கின்றன.

உதாரணமாக ஒன்றைச் சொல்லுகிறேன். தென் இந்தியாவில், ஒரு இரும்புத் தொழிற்சாலையோ, சுரங்கத் தொழிலோ, 'டீஸல்' இஞ்ஜின் அல்லது மோட்டார் வண்டித் தொழிற்சாலையோ தொடங்கவேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்டால், தென் இந்தியாவில் மூலப் பொருள்கள் இல்லை, தொழில் நிபுணர்கள் கிடையாது, ஆகையால் அவைகளை லாபகரமாக நடத்த முடியாது என்று சொல்லி, இத்தியாதி காரணங்களால் அத் தொழில்களுக்குத் தென் இந்தியா ஏற்ற இடமல்ல என்று நொண்டிச் சமாதானம் கூறிவிடுவார்கள்.

காலாவதியான பழைய ஆராய்ச்சிகளையும், சயகல சிரத்தை யுடையவர்களால் தயாரிக்கப்பட்ட பழைய அறிக்கைகளையுமே, இப்பொழுள்ள நிர்வாகிகளும் பின்பற்றி வருகின்றனர். உங்களில் யாரேனும், இங்குள்ள மந்திரிகளில் எவரேனும், மந்திரி என்கிற அந்தஸ்துடனே, உத்தியோகஸ்தர் என்கிற முறையிலோ வடக்கே செல்வதாயிருந்தாலும், அங்கு போனபின் நீங்களும் அதே விதமாகத்தான் பாடம் ஒப்புவிப்பீர்கள்.

ஆஸ்திரேலியா ஜப்பான்போன்ற நாடுகளும் ஐரோப்பாவிலுள்ள பல தேசங்களும், தேவைக்குரிய பல மூலப் பொருள்கள் இல்லாமலே தொழில் துறைகளில் எப்படி மேன்மை அடைந்தன என்பதை நாம் கவனத்தில் வைக்கவேண்டும். வட இந்தியாவில் கூட எல்லா மூல பொருள்களும் கிடைத்து விடுவதில்லை. அப்படியிருந்தும், அந்தப் பிரதேசங்களில் தொழிற்சாலைகள் எப்படி விருத்தி அடைந்தன? ஆகவே, நமது மந்திரிகள், இந்தனைக் குரிய இந்த உண்மைகளைப் பற்றித் தீர்க்கமாக யோசித்து தைரியமாகவும் சாதுர்யமாகவும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களாக.

எனது பழங்காலக் கிரியாம்சங்களை விட, அவற்றால் நான் அடைந்துள்ள மகிழ்ச்சியை அதிகப்படுத்துவதற்கான அம்சம் வேறதிகம் இல்லையானாலும், எனது திருப்தியின் ஆழத்தைத் தொட்டுவிட்ட இந்த விழாவை நான் மகிழ்வோடு ரசிக்கிறேனானாலும், இவைகளினாலெல்லாம் மகிழ்வின் எல்லையை நான் அடைந்தவனாக மாட்டேன். நம் தென் இந்தியாவில் நானாவிதத் தொழிற்சாலைகள் ஏற்பட்டு அவைகளின்மூலம் எல்லா பொருள்களும் உற்பத்தியாகும் காலம் எதுவோ,

(37-ம் பக்கம் பார்க்க)



ஈரோட்டுப் பாதை :—விலை அணா 8 ; ஆசிரியர் : மா. இளஞ்செழியன் ; பகுத்தறிவுப் பாசறை, பவழக்காரத் தெரு, சென்னை 1.

பெரியார் அவர்கள் இருபதாண்டுகளாகப் பாடுபட்டு வரும் பண்பாட்டை விளக்கவரும் நூல் இது. பல்வேறு பகைவர் தம் கொடுஞ்செயல்களுக்கு இடையே - சூட்சிகளுக்கு இடையே தலைவர் தம் கொள்கையை எந்தெந்த வகையில் அரும்பாடுபட்டு இன்றைய நிலையில் உருப் பெறச் செய்தார் என்பதை இந்நூல் நன்கு விளக்குகின்றது. சமய சஞ்சீவிகள் பலர் காலப் போக்கிற்கு என்றபடி கட்சிமாறிக் கலைந்த போதிலும் தனியாக நின்று தாளாற்றி இன்றைய நிலைக்கு மக்களை மாற்றிய பாதையைப் பற்றிய நூல் இது. தமிழர் ஒவ்வொருவரும் பெற்றுப் பாதையைப் பற்றிய உண்மையை அறிதல் வேண்டும்.

திராவிடஸ்தான் வேண்டாமா ? :—விலை அணா எட்டு ; பகுத்தறிவுப் பாசறை, பவழக்காரத் தெரு, சென்னை 1.

இச்சிறுநூல் கம்யூனிஸ்ட் - திராவிடக் கழக உறுப்பினர்தம் எழுத்துப் போர். திராவிடநாடு வேண்டாம் என்று கூறும் கம்யூனிஸ்டுத் தோழர் திரு. சீ. வி. சங்கரர் அவர்களுக்குத் திராவிட கழகத் தோழர் மா. இளஞ்செழியன் விடுக்கும் பதில் இதுவாகும். இருவர்தம் எழுத்தும், வாத - மாற்று வாதங்களும் படிக்கத் தக்கன.

பெண்களுக்குச் சம உரிமை :—விலை அணா 12 ; நியூ இந்தியா புக் அவுஸ், இராமச்சந்தரபுரம், திருச்சி ஜில்லா.

கல்லூரி மாணவிகள் சிலர் தம் கருத்துக்களைத் திருத்தமுற எழுத்தோவியங்களாக எழுதி வெளியிட்டுள்ளனர். அவர்தம் எழுத்துத் தொகுப்பே இந்நூல். வாழ்வில் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டிய வகைகளும் முறைகளும் விளக்கப் பட்டுள்ளன.

Printed by V. Rajammal at Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah. Published by G. Ramasami, 34, Vaithiyanatha Mudali Street, Chetput, Madras 10.
Editor : A. M. Paramasivanandam, B.O.L., M.Litt. M.R.A.S.

கள்ளோ காவியமோ : ஆசிரியர் : மு. வரதராசனார். விலை ரூ. 3½
விற்பனை உரிமை : பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை - 1.

கள்ளரக்கன் அகலவேண்டிய ஆக்க வேலைகள் நடக்கும் காலத்தில் - பெண்ணைக் கள்ளாகக் காணும் காமுகர்களும் காவியமாகச் சுவைக்கும் காதலர்களும் உள்ள இந் நாளுக்கு - நாட்டுக்கு இந்நூல் பெருவிருந்தாகும். 'கள், குடிப்பவன் வாயில் நாறி அழிகின்றது, காவியமோ, படிப்பவன் வாயால் புகழ் பெற்றுச் சிறப்படைகிறது' என்று இரண்டுக்கும் விளக்கம் தருகிறார் ஆசிரியர்.

மக்கள் வாழ்க்கையில் வரும் மாறுதல்களை விளக்க வரும் ஒரு நாவல் இது. பெருங்காவியமாகப் பாதுகாக்கத் தக்க வாழ்வுப் பெட்டகமாக காட்சி அளிக்கும் நூல் இது. அருளப்பனும் மங்கையும் தம் தம் வாக்கினால் அவர் வாழ்வை நமக்கு விளக்குமுகத்தான் நாம் உலக வாழ்வில் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறார்கள். வாழ்வில் பெருகபெரும் வெற்றி பெற்றவர் தம் முடிவு எதிர்பாராத மரணமே என்ற உண்மையை நூலின் முடிவு நன்கு காட்டுகிறது.

திருவாசகம் - திருச்சதகம் (பண்டிதமணி உரையுடன்) : விலை ரூ. 8. கிடைக்குமிடம் :—பொதிகைப் பதிப்பகம் - கடலூர் N. T.

தமிழ்நாட்டிலே சமய இலக்கியங்களுக்கு உரை எழுதலாகாது என்ற ஓர் எண்ணம் சில வைதிகர்களிடமிருந்தது. உரை எழுதி - உரையாசிரியர்கள் நூலாசிரியர் கருத்துக்குமாறுபட்டு விளக்கம்தருவார்களோ என்று கருதினார்கள் போலும். நூலாசிரியர் கருத்துக்கு மாறுபாடு இன்றி உரைகள் வருதல் வரவேற்கத்தக்கதே. அந்த முறையில் வந்த நூல் இது.

சைவ இலக்கியங்களில் தலைசிறந்தது திருவாசகம். ஆங்கிலத்தில் - ஆங்கில நாட்டாரால் (G. V. போப்) மொழிபெயர்க்கப்பட்ட நூல் திருவாசகமே. அந்நூலுள்ளும் திருச்சதகம் சிறந்த பகுதியாகும்.

திருவாசகத்துக்கு சில உரைகள் வந்துள்ளன. திருச்சதகத்துக்குச் சிறந்த உரை - பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்களால் எழுதப்பட்ட உரை நூல் மிக அழகிய வடிவில் அச்சிடப்பட்டு, கட்டப்பட்டு வெளிவந்துள்ளது.

உரை என்பதும் சாதாரண பதவுரை பொழிப்புரை - கருத்துரை என்ற அளவோடு அமைதல் வேண்டும் என எண்ணுவர். இவ்வுரை அனைத்தினுக்கும் மேலாகச் சிறந்த வகையில் விளங்குகின்றது. திருச்சதகம் இது வரையில் காணாத உரை பெற்றுள்ளது என்பது தேற்றம்.

ஒவ்வொரு பதிகத்தின் பெயர் அமைந்த [illegible] முறையை அப்பதிகப் பாட்டுக்கள் வழியே காண்டலும், [illegible] பதிகங்களுக்கும் உள்ள தொடர்புகளை விளக்கும் [illegible]ம், கொண்ட அழகை விளக்க மேற்கொள்ள பிழநான் முடிபு, [illegible] முடிவுகளும், பிற சிறந்த நலன்களும் இவ்வுரையிடைக் காணலாம். சைவ அன்பர்களுக்கு - மணிவாசகர் உள்ளம் அறிய விரும்புவோர்க்கு இந்நூல் ஒரு கருவூலம் என்பது முடிவு.

Wrapper only—Shakti Press Ltd., Madras 14.